# சிறுகதை பயிற்சிப்பட்டறை

## தெரிவு செய்யப்பட்ட சிறுகதைத் தொகுப்பு

அனுசரணை

**கலாசாரப் பேரவை**

பிரதேச செயலகம்,

கோறளைப் பற்று,

வாழைச்சேனை.

விரிவுரையாளர்


**திரு.செ.யோகராசா** (முதுமானி)

தலைவர்

மொழித்துறை

கிழக்குப் பல்கலைக்கழகம்,

வந்தாறுமூலை,

செங்கலடி.

# சிறுகதை பயிற்சி பட்டறை

## தெரிவு செய்யப்பட்ட சிறுகதைத் தொகுப்பு

**அனுசரணை**

**கலாசாரப் பேரவை**
பிரதேச செயலகம்,
கோறளைப் பற்று,
வாழைச்சேனை.

**வளவாளர்**


**திரு.செ.யோகராசா (முதுமானி)**
தலைவர்
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை,
செங்கலடி.

# காட்டுப் பூனைகளும் பச்சைக் கிளிகளும்

- தி.ஞானசேகரன் -

அறையின் நான்கு பக்கச் சுவர்களும் என்னை நோக்கி நகர்கின்றன. மெதுமெதுவாக நகர்கின்றன. இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்தச் சுவர்களுக்குள் நான் நசுங்கிச் சாகப் போகிறேன்.

தலை சுற்றுகிறது. நெஞ்சு விம்மித் தணிகிறது. தேகம் குப்பென்று வியர்க்கின்றது. கைகளால் கண்களைப் பொத்திக்கொண்டு நான் வீரிட்டு அழுகிறேன்.

சுவரில் மாட்டப்பட்டிருக்கும் மணிக்கூட்டில் நேரம் காலை எட்டு மணி. அதன் 'டிக் டிக்' சத்தம் பெரிது பெரிதாகிக் கொண்டே வருகிறது..... என்னை நெருங்கி நெருங்கி வருகிறது. ஏ.கே.47 இன் சத்தம்போல் என் காதைப் பிளக்கிறது.

"சும்மா சத்தம் போடாதையடி பிள்ளை...." அம்மா அடுப்படியிலிருந்து பலமாகக் கத்திறா.

கண்களைப் பொத்தியிருந்த கைவிரல்களைச் சிறிது விரித்து, நீக்கலினூடாகப் பார்க்கிறேன். இப்போது சுவர்கள் பின்புறமாக நகரத் தொடங்குகின்றன. சிறிது நேரத்தில் மீண்டும் தமது இடத்தில் பொருந்திக்கொள்கின்றன.

நேரம் எட்டு ஐந்து.

ரியூசன் வகுப்புக்கு நேரமாகிறது. வசந்தி, கவிதா, பூரணி, நான் எல்லோரும் சேர்ந்துதான் சைக்கிளில் ரியூற்றறிக்குப் போவோம். இண்டைக்கு 'கெமிஸ்றி கிளாஸ்', "சேர்" ஒன்பது மணிக்கெல்லாம் வந்துவிடுவார்.

"அம்மா, அம்மா...... கதவைத் திறவுங்கோ........ நேரமாச்சு. நான் ரியூசனுக்குப் போக வேணும்".

"..........."

நான் கதவைப் படபடவெனப் பலமாகத் தட்டுகிறேன்.

"அவளோடை பெரிய கரச்சல்.... ரியூசனுக்குப்போற நேரம் வந்திட்டால் அலட்டத் தொடங்கிவிடுவள்"... அம்மா முணுமுணுக்கிறா.

"கிணிங்....... கிணிங்........"

தெருவிலை நிண்டு வசந்தி பெல் அடிக்கிறாள். என்னைக் கூட்டிக் கொண்டு போகத்தான் வந்திருக்கிறாள்.

"அம்மா கதவைத் திறவுங்கோ...... ஏன் பூட்டிவைச்சிருக்கிறியள்? வசந்தி என்னை விட்டிட்டுப் போகப்போறாள்".

அவள் என்னை விட்டிட்டுப் போனா, நான் தனியாகத்தான் போகவேணும். இனிமேல் நான் அந்தப் பக்கம் தனியாகப் போகமாட்டன். எனக்குப் பயமா இருக்கு.... தனியாக அவங் கடை 'சென்றி'யைத் தாண்டிப்போற தெண்டா....... வசந்தி கூடவந்தால் பயமில்லை.

"அது வசந்தியில்லைப் பிள்ளை. வேறை யாரோ தெருவிலை பெல் அடிச்சுக் கொண்டு போகினம். நீ சும்மா சத்தம் போடாமல் இரு".

அம்மா பொய் சொல்லுறா. வசந்தியின் பெல் சத்தம் எனக்குத் தெரியும். போறது

வசந்திதான். கதவைத் தட்டித் தட்டி அம்மாவைக் கெஞ்சிக் கெஞ்சி நான் சோர்ந்து போகிறேன். கதவைத் தட்டிய கைகள் வலிக்கின்றன.

வசந்தி போயிருப்பாள். ரியூசன் தொடங்கிற நேரமாச்சு. அவள் தனியாகத்தான் போனாளோ அல்லது கவிதா, பூரணி எல்லாரும் சேர்ந்து போச்சினமோ? எப்பிடிப் போனாலும் அவங்கள் சும்மா விடமாட்டாங்கள். ஐ.சி.யைத் திருப்பித் திருப்பிப் பார்த்து....... ஸ்கூல் பேக்குகளைக் கொட்டிக் கிளறி, கேள்வியள் கேட்டு..........

சின்னராசு கார் ஓட்டிவரும் சத்தம் கேட்கிறது. யன்னல் பக்கம் சென்று வெளியே பார்க்கிறேன். யன்னலின் ஒரு பக்கக் கதவு உடைஞ்சு தொங்குது; இழுத்துப் பூட்ட ஏலாது.

"அடே சின்னராசு, இங்கை வாடா........ அச்சாப் பிள்ளையெல்லே....... இந்த அறைக் கதவைத் திறந்துவிடடா".

அவனுக்கு நான் சொல்லிறது கேட்கேல்லை. விர்ரென்று வேகமாய்க் கார் ஓட்டும்போது வாயிலிருந்து எச்சில் பறக்கிறது. தூவானமாய்த் தெறிக்கிறது. கால் இடறி விழப் போகும் நேரத்தில் சமாளித்துக்கொண்டு கியரை மாற்றுகிறான். ரிவேர்ஸ் கியர் பின்புறமாய் ஓட்டிவந்து விறாந்தையின் முன் நிற்பாட்டுகிறான்.

அவன் எங்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் விறாந்தையில் தொங்கும் கிளிக் கூண்டின் பக்கம் போவான். 'ரிவிரஸ' இராணுவ நடவடிக்கையின்போது நாங்கள் ஊரைவிட்டு ஓடி வன்னிக்குப் போயிருந்த காலத்திலை ஒரு கிளி பிடிச்சனாங்கள். திரும்பி வரேக்கை அதையும் கொண்டுவந்திட்டம்........ அது என்ரை செல்லக்கிளி.

சின்னராசு தினமும் கிளி சாப்பிடுகிறதுக்கு ஏதாவது கொண்டு வந்து கொடுப்பான். அது சாப்பிடுவதை வேடிக்கை பார்ப்பான். வெகுநேரமாய்க் கிளியுடன் பேசுவான். அவனைக் கண்டுவிட்டால் கிளிக்கும் குதூகலம் பிறந்துவிடும்; ஏதேதோ பேசும். யன்னலினூடாக வீட்டின் முன்புறத்தைப் பார்க்க முடியாது. அதனாலை சின்னராசு என்ன செய்யிறான் எண்டு என்னால் பார்க்க முடியவில்லை.

சின்னராசு மீண்டும் காரை ஸ்ராட் செய்கிறான்.

"அடே என்ரை ராசாவெல்லே..... கதவைத் திறந்துவிடடா". நான் மீண்டும் அவனிடம் கெஞ்சுகிறேன்.

"முடியாதக்கா... திறந்துவிட்டால் மாமி என்னைப் பேசுவா" என்று சொல்லிக் கொண்டே கார் ஓட்டியவண்ணம் அவன் விரைகிறான்.

எனக்கு மீண்டும் தலை சுத்துகிறது. திடீரெண்டு நாலுபக்கச் சுவர்களும் கைகோர்த்துக் கொண்டு என்னைச் சுற்றி வட்டமாய்ச் சுழல்கின்றன. "ஐயோ.... ஐயோ..." நான் கண்களை மூடிக்கொண்டு வீரிட்டு அலறுகிறேன். நெஞ்சு படபடக்கிறது. தேகம் வியர்வையில் நனைகிறது. மயக்கம் வருகிறது. நான் நிலத்திலே சாய்கிறேன். எவ்வளவு நேரம் மயங்கிக் கிடந்தேனோ எனக்கே தெரியாது.

விழித்தெழுந்தபோது உடம்பெல்லாம் வலியெடுக்கிறது. சோர்வாக இருக்கிறது. இப்ப ரியூசன் முடிஞ்சிருக்கும். முந்தி வடக்குச் சந்தியிலை சென்றி இருந்தபொழுது எங்களுக்கு எந்தக் கரச்சலும் இல்லை. பனை வடலியளுக்குப் பின்னாலிருந்து எழும்பி வருகிற சூரியனை ரசித்தபடி நாங்கள் ரியூசன் வகுப்புக்களுக்குப் போறனாங்கள். சென்றிப் பக்கம் போகாமலே ரியூற்றறிக்குப் போகலாம். இப்ப இடத்தை மாத்திப் போட்டாங்கள். எங்கடை வீட்டிலை இருந்து நாலு வளவு தள்ளி சென்றி போட்டிருக்கிறாங்கள்.

போன மாசத்திலை ஒருநாள் மைமல் பொழுது.... 'றக்' ஒண்டிலை வந்து அந்தப் பெரிய வீட்டுக்கு முன்னாலை இறங்கினாங்கள். வீட்டையும் வளவையும் சுத்திச் சுத்திப் பாத்தாங்கள். அடுத்த நாள் மரங்கள் தறிச்சு விழுத்துகிற சத்தங்கள் கேட்டுது. பனையளைத்தான்

தறிச்சவங்கள். பனை யாழ்ப்பாணத்தின் சின்னம்: கற்பகதரு எண்டு எங்கடை ஆக்கள் சொல்லிறவை. இவைய ளுக்குப் பனையளைத் தறிச்சாத்தான் பாதுகாப்பாம்!

தெருவிலை மண்மூடையள்... மரக்குத்தியள்.... தகரங்கள்... பெயின்ற் அடிச்ச தார்ப் பீப்பாக்கள்... துவக்கோடை நிக்கிற இளவட்டங்கள்.. கொச்சைத் தமிழ் மிரட்டல்கள்... கொஞ்சல்கள்... வெறித்த பார்வைகள்...... காவல் அரண் ஒன்று புதிதாய் முளைத்தது.

அங்கு ஒரு நெட்டையன். பெயர் சரத். எந்தநாளும் சொட்டைக் கதைதான் கதைப்பான். அவனுக்குத் தமிழ் எழுத வாசிக்கவும் கொஞ்சம் கொஞ்சம் தெரியும்.

"சிங்களம் பேசத் தெரியுமா?" எண்டுதான் முதலில் கேட்பான். இல்லையென்று சொன்னால் கொச்சைத் தமிழிலே கதைப்பான்.

'தமிழ்ப் பெட்டையள் நல்ல வடிவாம். இங்கை பொம்பிளைப் பிள்ளையள் எல்லாருக்கும் சைக்கிள் ஓடத் தெரியுமாம்' "உங்கடை அம்மாமாருக்கும் சைக்கிள் ஓடத் தெரியுமோ" எண்டு ஒருநாள் கேட்டான். எங்கடை 'ஐ.சி.'யை வாங்கிவச்சுக்கொண்டு கன நேரமாய்த் தராமல் கதைச்சுக்கொண்டே இருந்தான்.

வசந்திக்குக் கோபம் வந்திட்டுது. "ரியூசனுக்கு நேரமாச்சு, ஐ.சி.யைத் தாருங்கோ தராட்டில் பெரியவனிட்டை ரிப்போட் பண்ணுவம்" என்று படபடத்தாள்.

"நான்தான் இங்கை பெரியவன்" எண்டு சொல்லிச் சிரித்தான் அவன்.

அந்தச் சென்றியைக் கடந்து போறதெண்டா எல்லாருக்கும் சங்கடம்தான். வண்டில்களில், சைக்கிள்களில், தலைச்சுமைகளில் கஷ்டப்பட்டுக் கட்டியேத்திக் கொண்டுபோற சாமான்களை 'செக்' பண்ணிறதெண்டு கொட்டிச் சிந்துவாங்கள். சைக்கிள் செயின்கவர்களைக் கழட்டிச் செக்பண்ணிப்போட்டு நிலத்திலை போடுவாங்கள்: நாங்கள்தான் அதைப் பூட்ட வேணும்.... கொழுப்பு..

அண்டைக்கு எங்களைச் செக்பண்ணிற நேரத்திலை 'வேறையொருத்தரையும் செக்பண்ணாமல் போகவிட்டாங்கள். எல்லாரும் எங்களைத் திரும்பித் திரும்பிப் பாத்துக் கொண்டே போச்சினம். சந்தேகக் கண்கள்... எங்களுக்குக் கூச்சமாய் இருந்தது.

கொஞ்ச நாளில் ரியூசன் வகுப்பிலை எங்களைப்பற்றிக் கிசுகிசுப்பு.. நாங்கள்தான் வலிய வலியப் போய் சென்றியிலை நிண்டு சிரிச்சுச் சிரிச்சுக் கதைக்கிறமாம்.

பின்வாங்கிலை இருக்கிற சிவராசன் சொன்னான், "எங்கடை ஊர்ப் பெட்டையள், தெரிஞ்சதுகள் எண்டு ஆசையாய் நாங்கள் ஏதும் பகிடி கதைச்சால் எங்களை முறைச்சுப் பாக்கி றாளவை... அவங்களோடை இளிச்சு இளிச்சு நளினம் பேசிறாளவை"

"அதுமட்டுமில்லையடா, எங்களைப்பற்றி அவங்களிட்டை றிப்போட் பண்ணுறாளவை" என்றான் பக்கத்தில் இருந்த வேல்முருகு.

அப்போது வசந்தி என்னுடைய காதுக்குள்ளை சொன்னாள். "உவையளுக்கு எங்கடை நிலைமை எங்கை தெரியப்போகுது? அவங்கள் கேள்வி கேட்டால் பதில் சொல்லாமல் இருக்க முடியுமே? அவங்களோடை சிரிச்சுக் கதைச்சா செக்கிங் குறையும். பிரச்சினை இருக்காது. நாங்கள் மனசுக்குள்ளை எரிஞ்சுகொண்டுதான் வெளியிலை சிரிக்கிறம் எண்டது உவையளுக்குத் தெரியாது.

கொஞ்ச நாளில் எல்லாம் பழகிப்போய்விட்டது. சென்றியில் எங்களுக்குப் பெரிதாய் செக்கிங் ஏதும் இருப்பதில்லை. தனியாய்ப் போகும்போதும் பயமிருக்காது. அதனால் ரியூற்றிக்குப் போகும்போது சேர்ந்து போகவேண்டுமென்ற நிலைமையும் இல்லை. இப்போது அங்கு ஐசியை எங்களிடம் கேட்கமாட்டார்கள். ஆனாலும் அந்த இடத்தில் சைக்கிளை ஓட்டிச் செல்வ தற்கு எவருக்கும் அநுமதியில்லை. இறங்கி உருட்டிக்கொண்டுதான் போக வேணும்.

வசந்தி ஒருநாள் என்னிடம் கேட்டாள், "சென்றியிலை நிக்கிற சரத்தைப் பற்றி நீர்

என்ன நினைக்கிறீர்?"

"நல்ல ஆள்மாதிரித்தான் தெரியுது" என்றேன்.

"அவனோடை நீர் அடிக்கடி கதைக்கிறீராம். அவன் உமக்கு லெட்டர் குடுத்தவனாம், போய்ஸ் கதைக்கினம்".

"என்ன வசந்தி நீரும் அதை நம்புறீரே? லெட்டர் எனக்குக் குடுக்கேல்லை. போறவழியிலை போஸ்ற் ஓபீஸிலை போஸ்ற் பண்ணச் சொல்லித்தான் தந்தவன்... சத்தியமாய் வேறையொண்டும் இல்லை". நான் அழுதுவிட்டேன்.

சின்னராசு யன்னல் பக்கம் பரபரப்புடன் ஓடிவருகிறான். யன்னல் கம்பிகளைப் பிடித்தபடி தாழ்ந்த குரலில் கிசுகிசுக்கிறான். "அக்கா அக்கா ஆமிக்காறங்கள் தெருவிலை நிக்கிறாங்கள். வீடுவீடாய் செக்பண்ணப்போறாங்களாம், எனக்குத் தெருப் பக்கம் போகப் பயமாய் இருக்கு. அதுதான் இங்கை ஓடிவந்தனான்."

எனக்குத் தலைக்குள் ஏதோ செய்கிறது. சுவர் ஓரமாய் மறைந்து நின்று தெருப் பக்கம் பார்க்கிறேன் சரத்தின் தலை தட்டிப்படலைக்கு மேலால் தெரிகிறது. அவனருகே நிற்பவன் சுமதிபாலா. அவர்கள் என்னைத் தான் நோட்டம் விடுகிறார்கள். சரத் என்னைக் கண்டிட்டான். தலையில் அணிந்திருக்கும் தொப்பியை முன்புறமாகச் சரித்து தன்னுடைய முகத்தை மறைக்க முயற்சிக்கின்றான். கூர்ந்து பார்க்கிறான். அவனது கையில் ரி.56 இருக்கிறது துவக்கின் விசையில் அவனது சுட்டுவிரல் பதிவது நன்றாகத் தெரிகிறது.

எங்கோ இருந்து வந்த காட்டுப் பூனையொன்று முன்விறாந்தைப் பக்கம் போகிறது.

"மியாவ், மியாவ்"

"எடே சின்னராசு கிளிக்குச் சாப்பாடு போட்டனியே? கூடு திறந்தபடியே கிடக்கு? பூனை உலாவுதடா கவனம்.

சின்னராசு என்னை விநோதமாய்ப் பார்க்கிறான். "என்னக்கா மறந்துபோனியளே? இப்ப கிளி அங்கை இல்லை ....... போன கிழமை அது செத்துப்போச்சு".

ஓ.... ஓமோம், எனக்கு நினைவுக்கு வருகிறது... கொஞ்சம் கொஞ்சமாய் புகை மூட்டத்துக்குள் தெரிவதுபோல் நினைவு வருகிறது. நான் விம்மி விம்மி அழுகிறேன்.

அண்டைக்கு நான் தனியாகத்தான் போனனான். சென்றியிலை சரத்தும் சுமதிபாலாவும் தான் நிண்டவங்கள். என்ரை சைக்கிளைப் பறிச்சு உள்ளுக்குக் கொண்டுபோய் வச்சிட்டாங்கள். சைக்கிளைத் தரச்சொல்லி நான் கெஞ்சி மன்றாடினன். உள்ளுக்குப் போய் எடுக்கச் சொன்னாங்கள்.

நான் தயங்கித் தயங்கி....... பயந்து பயந்து..... ஐயோ எனக்கு மயக்கம் வருகுது. தேகம் நடுங்குது. நெஞ்சு படபடக்குது.

ஓ. அதுக்குப் பிறகு... உச்சந் தலைக்குள் ஏதோ கிழிந்து சிதறி..... எழும்பமுடியாமல்.... எழும்பி, நடக்க முடியாமல் தள்ளாடித் தள்ளாடி, சைக்கிளை உருட்டிக் கொண்டுதான் வீட்டுக்கு வந்தனான்.

விறாந்தையிலை சைக்கிளைச் சாத்தினபோது அம்மா கவலையோடு சொன்னா, "உவன் சின்னராசு வந்து கிளிக்குச் சாப்பாடு போட்டுக்கொண்டிருந்தவன், கூட்டுக் கதவைப் பூட்ட மறந்திட்டான். காட்டுப் பூனையொண்டு திரிஞ்சது... கிளியைக் கடிச்சுக் குதறிப்போட்டுது பிள்ளை......"

எனக்கு நெஞ்சு விறைச்சுப் போச்சு.

அம்மா என்ன சொல்லிறா...... ஒருவேளை... ஒருவேளை?

என்னுடைய தேகம் நடுங்குது.

கிளி இரத்த வெள்ளத்தில் குற்றுயிராய்க் கிடக்கிறது. அதன் அடிவயிற்றின் கீழ் காட்டுப்பூனை பதித்த கோரச்சுவடுகள்.......

மயங்கி நிலத்திலே சாய்கிறேன்.

என்னைச் சுற்றியிருக்கும் சுவர்கள் சுழல்கின்றன. என்னை நெரிப்பதற்கு மெது மெதுவாய் நெருங்கி வருகின்றன.

"ஐயோ..... ஐயோ!"

◆ ◆ ◆ ◆ ◆ ◆

# இளவரசி

ஓட்டமாவடி
- அரபாத் -

அரண்மனை இன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. சுற்றிலும் வெண்புரவி மீதமர்ந்து கனல் கக்கும் விழிகள் உருட்டி பட்டாளத்தினர் காவல் புரிந்தனர். இராஜ விசுவாசத்தை நிருபணம் செய்யுமாற்போல் அவர் தம் கூர்விழிகள், சாலையில் வருவோரையும் போவோரையும் உருட்டிக் கொண்டிருந்தன. நகருக்குள் நுழையும் பிரதான வழியாவுமே மூடப்பட்டி ருந்தன. வாகனங்கள் குறுஞ்சாலை வழியாக திசைதிருப்பப்பட்டன.

இவ்வொழுங்குகளை கவனிக்கவென ஒரு பட்டாளத்தான் முற்சந்தியில் அமர்த்தப் பட்டிருந்தான். மாளிகை முன்றலில் பசிய கொடிகள் பந்தலிட்டு படரவிடப்பட்டிருந்தன. அழகு நேர்த்தி துருத்திக் கொண்டு தெரியுமாற் போல் செழுமையாக நறுக்கிவிடப்பட்டிருந்தது. செடிகளில் ஒட்டிக் கொண்டு சில்வண்டுகள் ரீல் வைத்தன.

அரண்மனை ஏன் களையெடுக்கிறது என கும்பல் விவாதத்தில் இறங்கியது. குடிமக்கள் எவருக்கும் சிக்கலில்லை. அது தான் மேலிட விருப்பமும். ஐந்து பேருக்கு தலைமை தாங்கிக் கொண்டு ஒரு பரட்டைத் தலை ஆசாமி காரசாரமாக பேசிக்கொண்டி ருந்தார். தான் ஒரு அரசியல் சாணக்கியர் என பிறர் மட்டிட வேண்டும் என்பதற்காக, தேச விடுதலைக்கு முந்திய அரசாங்கம் பற்றியும், தலைவர்கள் பற்றியும் ஒப்பிட்டு, அக்காலத்தில் நிகழ்ந்த வரலாற்று முக்கியத்துவத்தை (அவர் கருதக்கூடிய) சம்பவங்களையும் தன் பேச்சின் நடுவே நைச்சியமாக சேர்த்துக் கொண்டார்.

யாரோ ஒருவன் குறுக்கு விசாரணை செய்தான். அவர் சமயோசிதமாக விடைய ளித்தார். "அப்படியல்ல பாதயாத்திரை"ன்னு பேரு என ஒரு வழுக்கத் தலை சாணக்கியரை திருத்தியது. "இங்கிருந்து நடந்துதான் போயிருப்பாக. இடையில பஸ்ஸில போனாங்க எண்டு சொன்னன்". குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என சமாளித்துக் கொண்டார். சாணக்கியர்.

ஆனால் அரண்மனைக்குள் என்னவென்று அனுமானிக்க முடியாத அந்தரத்தில் தவித்துக் கொண்டிருந்தனர் சனங்கள். நாம் தான் இளவரசியை தெரிவு செய்தோம். நமக்குத் தெரியாம என்ன விழா? சாணக்கியர் ஆதங்கச்சாணை பிடித்தார். அவரைச் சூழவிருந்தவர்களின் புத்தியை அது கறகறவெனத் தீட்டி விட்டது. அதிருப்தியாய் பிசுபிசுத்தனர். சந்தியில் நின்ற பட்டாளத்தான் இவர்களின் இரைச்சல் கேட்டு அருகே நெருங்கினான்.

ஏய் இங்கே நின்று குழப்பம் செய்யாமல் அப்பால் போங்கள் சலசலப்பும், பதைபதைப்பும் ஏறிவிட்டது.

ஐயா எங்கள் மாளிகையில் என்ன நடக்குதுண்டு. நாங்க அறியேலுமா? சாணக்கியர்.

அதெல்லாம் ராஜத்துரோகம். உள்ளிடத்து விவகாரம் உங்களுக்கு எதற்கு? இடத்தை காலி பண்ணுங்கள்.

நாங்கள் தான் இளவரசியை தெரிவு செய்தோம். எங்களுக்கு அறியும் உரிமை இல்லையா?

உரிமை? இடிஇடியென சிரித்தான் பட்டாளத்தான்.

அவனது இடியோசை கேட்ட சக சிப்பாய்கள் நெற்றிச் சுருக்கம் விழ இவனை நெறுநெறுத்துப் பார்த்தனர். தன்மேல் பாயும் விழிகளின் உக்கிரம் உறைத்தது. பட்டாளத் தானுக்கு இடைநடுவில் சிரிப்பை நறுக்கிக் கொண்டான். அவ்விதம் இடியென இடித்தது இராணுவ விதிகளை மீறியதென்ற அச்சம் நெஞ்சில் உறைத்தது.

மனசுக்குள் ஓர் அவசம். மிரள மிரள சுற்றிலும் பார்த்துக் கொண்டான் தளபதிகள் யாருமில்லை. இவன் உள்மன அவஸ்தை செருக்கை, ரசிக்கும் மனோநிலையில் அவர்கள் இல்லை. பட்டாளத்தானின் நகைப்பு இவர்களை வதைவதைத்து வாட்டியது. அத்தனை வதனங் களும் ஜிவ்வெனச் சிவந்தன.

"உரிமைன்னா என்னாண்டு தெரியுமா ஓய்?" பட்டாளத்தான் எரிகிற தீக்குள் எண்ணெய் கவிழ்த்தான்.

இளவரசி எது செய்தாலும் எதிர்த்துப் பேசாமல் இருப்பது தான் உரிமை. அவனே விடையும் தந்தான்.

இது ஜனநாயக நாடு. பேசுவதற்கும், எழுதுவதற்கும் ; இளவரசியைப் பற்றி கேட்பதற் கும் உரிமை உண்டு எங்களுக்கு. ஏன் தெரியுமா நாங்கள் இந்த தேசத்தின் குடிமக்கள்.

ஜனநாயகம்? பட்டாளத்தானின் உதட்டின் கோணத்தில் கேலி துள்ளாடியது. அவனே தொடர்ந்தான்.

ஜனநாயகம் என்றால் நாம் நினைப்பதைத் தான் நீங்களும் நினைக்க வேண்டும். நாமென்றால் பட்டாளத்தினர்...... எம் படைத் தளபதி இளவரசிதான். அவள் பேசுவதை நீங்கள் ஆமோதிக்க வேண்டும். அவள் அறிக்கையை மட்டும்தான் படிக்க வேண்டும். அவள் கூட்டும் கூட்டங்களுக்கு வர வேண்டும். அவளுக்குப் பிடிக்காதவர்கள். உங்களுக்குக்கும் எதிரிகளே. இவைகளை மீறினால் தேசத்துரோக குற்றம் சுமத்தி சிறையில் தள்ளுவதற்கும் உரிமையுண்டு தெரியும்தானே.

என்ன இதற்குப் பெயர் ஜனநாயகம் இல்லையே! பாஸிசம்.

ஓய் வீண தர்க்கம் செய்யாதே ஜனநாயகம் என்பதே சர்வாதிகாரம் தான். இதை நீ திருத்தப் போகிறீரா, வேலையைப் பாரும் போ நீரும் உங்கட உரிமையும் சாணக்கியரும், அபிமானிகளும் முணுமுணுத்துக் கொண்டு திக்கொன்றாய் சிதறிப் போயினர்.

அத்தாணி மண்டபம். இளவரசி சிம்மாசனத்தில் கொலுவிருந்தாள். தோகை ஏந்திய ஆரணங்குகள் பவனமெழுப்பி பரவசமூட்டினர். உயர்பீடத்திற்கப்பால் மந்திரிகளும், அமைச் சர்களும், படைக்கலசேவிதர்களும் அமர்ந்திருந்தனர்.

தாமரைப் பொய்கையில் சாமரம் வீசுமெம்
தங்கப்புறா.
ஈசனை விஞ்சுவாள் நீதியின் தேவதை
எமக்கிவள் நேஸப்புறா
வாழிய வாழி..

கவிமழை பொழிந்தவராக புயல் புலவர் சபைக்கு வந்தார். அவர் அரசவை ஆஸ்தானப் புலவர். புலவரின் வாழ்த்தை, இளவரசி ஏற்றுக்கொண்டதற்கிணங்க, அடக்கமாய் புன்னகைத் தாள். இன்று இளவரசியின் பிறந்த நாள். தன் மந்திரி சபைக்கு விருந்தளித்து கவுரவிக்கிறாள். எல்லோருக்கும்விருந்து படைக்கும்படி மடைப்பள்ளித் தலைவரை பணித்தாள்.

குடியும் கும்மாள முமாய் அரைநாள் கழிந்தது. கவிஞர் கவிமழை பொழிந்து மகிழவித்தார்.

இந்த மகிழ்ச்சிகரமான வினாடியை இளவரசி பற்றிக் கொண்டாள். ஒரு முறை செருமிக் கொண்டு எழுந்து நின்றாள். எதையோ சொல்லப் போகிறாள். அமைச்சர்கள் இருக்கையில் வந்தமர்ந்தனர். இளவரசி பேசத் தொடங்கினாள். என் அன்பிற்கினிய குடிமக்களே! என் பிறந்த நாளை கூடிக் கொண்டாடிய உங்கள் அனைவருக்கும் என் நன்றிகலந்த வந்தனங்கள். கரகோஷம் வானைப் பிளந்தன.

இன்று உங்களுக்கோர் கதை சொல்லப் போகிறேன். சுவாரஸ்யமான கதை. அரசியின் பீடிகை அமைச்சர்களை இருக்கையின் விளிம்பிற்கு இழுத்தது. அரட்டைகளை இடைநடுவே நறுக்கிவிட்டு, கதைகேட்க வாகாய் அமர்ந்து கொண்டனர். அரச புலவர் எழுத்தாணியும் ஓலை யுமாய் பரபரத்தார்.

அது ஓர் அடர்ந்த வனாந்தரம். கொடிய மிருகங்களின் உறைவிடம். அவ்வனத்தை சிங்கம் ஆட்சிபுரிந்து வந்தது.

"ஆளும் தகுதி யாருக்குண்டு?"

"உங்களுக்குத் தான் இளவரசி" அமைச்சர்கள் கோஷமிட்டனர்.

"என்னைக் கேட்கவில்லை. வனாந்தரத்தை யார் ஆளவேண்டும் என்று கேட்டேன். உளறாதீர்கள்".

இளவரசி அலுத்துக் கொண்டாலும், உள்ளூர பூரிப்பில் இருந்தாள். இதில் என்ன ஐயம் சிங்கம்தான். ஆம் சிங்கத்தைத் தவிர வேறு எவருக்குத் தான் ஆளும் வல்லமை உண்டு. அவ்வனாந்திரத்தில் சிங்கம் தான் பேரரசன். அது வைத்தது தான் அங்கு சட்டம். பசுக்களின் ஆலோசனை அதற்கு பிடிப்பதில்லை. ராஜாளியும், நரியும்தான் அதன் மந்திரிகள்.

அக்காட்டினுள் குயில்களும் வாழ்ந்தன. எனினும் கூடுகள் இன்றித் தவித்தன. காகங்கள் அதன் குஞ்சுகளை கொத்தித் துரத்தின. குயில்கள் கூவின. அலையெனத் திரண்டன. வனரா ஜனிடம் பிரலாபித்தன. விடுதலைக்கென யாகம் பண்ணின. "வனராஜனே நாம் உங்கள் ஆளு கையில் தான் வாழ்கிறோம். எனினும் எமக்கு சுதந்திரமில்லை. சொந்தமாய் குடியிருக்க குச்சி வீடில்லை. காகங்களும் எம்மை விரட்டியடிக்கின்றன. எம் குஞ்சுகளை கொத்தி விரட்டு கின்றன நாம் எதிர்த்துக் கூவினால், குதறியெடுக்கின்றன. நாம் சுயமாய் வாழ்ந்திருக்க உங்கள் வனாந் தரத்தில் ஒரு வழி செய்யுங்கள் எனக் குயில்கள் கெஞ்சின.

இளவரசி கதையை நிறுத்திவிட்டு குவளையில் நீர் மொண்டு அருந்தினாள். அமைச்சர் களும், பிரதானிகளும் குத்திட்டிருந்தனர். அவர்தம் மனங்களில் கிலேசமும், கிளர்ச்சியும் ஊர்ந்தன. ஒற்றைக் குயிலொன்றின் பரிதாபக் கூவல் அடுத்த கட்டம் என்னவாகுமோ என்ற அந்தரம். ஆவலின் துடிப்பு.

இளவரசியோவெனில் வெகு அலட்சியமாய் சபா மண்டபத்தைத் துழாவினாள். மறுபடியும் செருமிக் கொண்டு எழுந்து நின்றாள். எதில் நிறுத்தினேன்? வனராஜனிடம் குயில்கள் கெஞ்சுகின் றன. உறைவிடம் கேட்டு மன்றாடும் உச்சத்தில் நிறுத்தினீர்கள் இளவரசி என்றார். எதிலும் முந்திக் கொள்ளும் ஒரு முந்திரிக் கொட்டை மந்திரி.

"குயில்கள் கூடமைக்க வனாந்தரத்தில் சிங்கராசன் இடங்கொடுத்ததா?" "அதை நீங்கள் சொல்லவில்லையே இளவரசி!" என்றார் இன்னொரு மந்திரி. அவர் குரலில் மிதமிஞ்சிய ஆர்வமும் துடிப்பும் துளிர்ந்து பிசிறடித்தது. சிங்கம் என்ன சொன்னது தெரியுமா? இளவரசி தொடர்ந்தாள். குயில்களே உங்கள் கோரிக்கை நியாயமானது. உங்கள் நிலை கண்டு பரிதாபப் படுகிறேன். வைகரை புலர்கையில் கானமிசைத்து என் வனாந்தரத்தை

துயிலெழுப்பும் உங்கள் தொண்டுக்கு நான் கடமைப்பட்டவன். இனிமையான அவ்வோசை கேட்டு நான் பூரித்து சிலிர்த்துப போகிறேன். எனினும் காகங்களை பகைத்துக் கொள்ளவும் என் மனம் இசையவில்லை.

காகங்கள்தான் உங்களுக்கு கூடுகட்டத் தகுதியானது நீங்கள் அதன் கூட்டுக்குள் வாழத்தான் தகுதி. சுய கூடு சாத்தியமில்லை. காகங்கள் விரட்டினாலும், உங்கள் குஞ்சுகளை குதறித்துப்பினாலும் அவைகளை அனுசரித்துப் போவது தான் புத்திசாலித்தனம். இதற்காக, நீங்கள் உங்கள் குஞ்சுகளை இழக்க வேண்டியும் வரலாம். உங்கள் இனத்தின் பெறுமதிமிக்க உயிர்கள் கூட கவரப்படலாம். இருந்தாலும் வேறு வழியில்லை என்றது சிங்கம்.

இளவரசி கதையை நிறுத்தினாள். இதன் மிகுதியை பின்பு சொல்கிறேன். எனினும் ஒரு கேள்வி, குயில்களின் விடயத்தில் சிங்கம் நடந்து கொண்டது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? இளவரசியின் இக்கேள்வி புதிதல்ல. கதையை சொல்லிவிட்டு அமைச்சர்களின் விவே கத்தை அளப்பதும், முடிவில் தன் கருத்தைக் கூறி சபாவைக் கலைப்பதும் பழைய உத்திகள். ஆனால் இந்தக் கதைக்கு உடனடியாக அமைச்சர்களால் அபிப்பிராயம் கூற முடியவில்லை. இன்னதென்று உணரமுடியாத மெல்லிய சோக இழை மனசுக்குள்ளோடியது. பேயறைந்தாற் போல் சில முகங்களில் இரத்தம் கன்றிற்று.

இருப்புக் கொள்ளாமல் நெழிவதும், பதறுவதுமாய் பரிதவித்தனர். எனினும் பதில் சொல்லியாக வேண்டும். சொன்னார்கள்.

"சிங்கத்தின் தீர்ப்பு நியாயமில்லை இளவரசி"

"ஆமாம் இளவரசி சிங்கம் குயில்களுக்கு அடைக்கலம் தந்திருக்க வேண்டும்"

"அதுவும் அதன் குடிகள்தானே"

"அவ்வாறு உரிமை கேட்கும் போது மறுத்தது தர்மமல்ல"

அவரவர் மனதில்பட்ட கருத்தைச் சொன்னார்கள். குயில்களின் மீது பரிவும், பச்சாதாபமும் சுரந்தது. சபாமண்டபம் மவுனத்தில் உழன்றது. இளவரசி தன் கருத்தைக் கூறி சபையை கலைத்து விடுவாள். இது பற்றி என்ன கூறப்போகிறாள் என்ற பரிதவிப்பும் அங்க லாய்ப்பும் சில மனங்க ளில் எரிந்து கனன்றன. உங்கள் விவேகத்துக்கும் கருத்துரைக்கும் என் நன்றிகள். நான் சொல்லட் டுமா? சொல்லுங்கள் இளவரசி, நீரினாழத்திலிருந்து புறப்படுமாற் போல் குரல்கள் நசிந்து உயிரறுந்து தெறித்தன.

"சிங்கத்தின் தீர்ப்பு முற்றிலும் சரியானதுதான்".

சபா மண்டபம் அதிர்ச்சியில் உறைந்திருந்தது.

◆◆◆◆◆◆

# தாய்

- வ.அ.இராசரத்தினம் -

என்னடா தம்பி, சுரிக்குள்ள மாட்டிக்கொண்டியா? ஓம், சைக்கிள் முழுக்க நல்லாச் சேறு புடிச்சிற்று. சில்லுக்கம்பிக்குள்ள, மட்காட்டில எல்லா இடத்திலயுமே சேறு நல்லா ஒட்டிக் கொண்டிருக்கு. அதுதான் சைக்கிள் ஸ்ராண்டில வைச்சிற்று கம்புக்குச்சியால சேற்றைத் தட்டுறியா? மெதுவாத்தம்பி மெதுவாத்தட்டு, உன்ர வெள்ளை வெளோர் என்றிருக்கிற வேட்டியிலயும், சட்டையிலயும் சேறு பட்டா அசிங்கமாயிருக்கும். அதன் பிறகு நீ பள்ளிக்குப் போகேலா.

ஆமாம் உன்னைப் பார்த்தா, உன்ர உடுப்பைப் பார்த்தா வாத்தியார் போலத்தான் கிடக்கு. எங்க ஊருக்குப் புதுசா வந்திருக்கியோ? அதுதான் இந்த றோட்டுல சுரி இருக்கும் எண்டு தெரியாம ராசா ஏறின குதிரை மாதிரிச் சைக்கிள் விட்டுக்கொண்டு வந்திருக்கா. கொட்டியாரத்திலிருந்து தார் றோட்டில ஓடிவந்த மாதிரிச் சந்தியில் இருந்து மல்லிகைத் தீவுக்குப் போயிரலாம் என்று நினைச்சியா. சரிதான். மெயின் றோட் சந்தியிலிருந்து மல்லிகைத்தீவு போறவரையுமுள்ள ஒண்ணரைக் கட்டைக்கும் இன்னமும் நல்ல றோட்டுப் போடல்ல. கோட, கொண்டல் காலத்தில் இந்தக் களித்தரை நல்லாக் கெட்டிச்சுப் போயிரும். அந்தக் காலத்தில் கல்றோட்டில ஓடுறமாதிரிச் சைக்கிள் ஓடலாம். ஆனா மழை பெஞ்சா இந்தத் தரை சக்கரை மாதிரிக் கசியத் தொடங்கிரும். ஈரத்தரையில எருமை மாடெல்லாம் போகும். மாட்டுவண்டி போகும். அதுகள் போறதால றோட்டுச் சேறு சந்தணம் மாதிரிக் குழைஞ்சிபோயி ரும். அதுவும் எங்க ஊர் மண் நல்ல பசையுள்ள மண். எங்க ஊர் அரிசியும் தான் தம்பி, அதுவும் பசையுள்ள அரிசிதான். சாப்பிட்டவனைப் பிரியவிடாது. எங்கள் ஊர் அரிசி.. அது மாதிரித்தான் சந்தனக் குழம்பாட்டம் இருக்கிற எங்கள் ஊர்ச்சுரியும் நல்லா ஒட்டிக் கொள்ளும். நீதான் பாரன். உன்ர சைக்கிள் றோதைக்க, சைக்கிள் கம்பிக்க, மட்காட்டில, றோதை அச்சில, புடிச்சிருக்க களி எப்படி ஒட்டிக் கொண்டிருக்கு? சைக்கிளை உருட்டக்கூடஏலா. ஏலாமத்தான் அப்பிக் கொண்டிருக்கிற சுரியை கழட்டி எடுக்கக் குந்திற்றா. மெதுவாத்தட்டு தம்பி. உன்ர உடுப்பில எல்லாம் சுரிபட்டிடும் பாவம்! வெள்ளை வேட்டி எல்லாம் பழுதாய் போயிரும்.

என்னைப் பைத்தியக்காரி என்று நெனைக்கிறியா? எனக்கென்ன? நீ எப்படியெண்டான நெனைச்சிக் கொள். எனக்கொண்ணும் கொறைஞ்சி போகாது. ஆனா வாத்தியாரான உனக்குச் சொல்றன் நான் ஒரு வாத்தியார்ர அம்மா, ஓம் மகனே என்ர மகளும் ஒருவாத்தியார்!

உன்ரசைக்கிளில ஒட்டியிருக்கிற சேற்றையெல்லாம் கம்புக்குச்சியால தட்டிப்பிறகு சைக்கிள்க் கம்பிய, சைக்கிள் சட்டத்தை எல்லாம் சுரண்டி, வாய்காலில் கொண்டு போய்க்கழுவியெடுக்க இன்னமும் எவ்வளவு நேரஞ்செல்லும்! உன்ர நல்ல காலம் மழையில்ல வானம் இருக்கிற நெலையைப் பார்த்தா இன்றைக்கு மழையும் வராது. அப்படி வந்தாலும் தைத்தூத்தல் தலைநனையாது என்று சொல்வாங்க. மழைக்குப் பயப்படாமல் சேத்தைத்தட்டி எடு. நீ சேத்தைத் தட்டி எடுக்குமட்டும் நான் உனக்கு ஒருகதை சொல்றன். எங்க ஊர்க்கதை தான் தம்பி. என்ர கதையுந்தான் சொல்றன் கேக்கிறியா? நீ பேசவேமாட்டா. உன்ர சைக்கிளில் ஒட்டிக் கொண்டிருக்கிற சேத்தைக் கிளீன் பண்றவரைக்கும் நீ பேசவேமாட்டா. பேசாட்டி என்ன நான் சொல்ற கதையைக் கேள்.

எங்கட மல்லிகைத்தீவு ஊர வளைச்சு ஒரே வயல் வெட்ட, பெரியவெளி, வடிச்சல் சேனை, சக்கரைவெட்ட, சிறுக்குளம் என்று எவ்வளவு வயல்வெட்ட? எல்லாம் ரெண்டுபோகம் செய்ற நீர்ப்பாய்ச்சல்பூமி. பெருவெளிக் குளத்தில் நெறைஞ்சி, மகாவலிகங்கைத் தண்ணி வயலுக்கெல்லாம் பாயும். எங்க ஊர் ஒண்ணும் பெரிய ஊர் இல்ல. வயல் வெட்டைக்கு நடுவில இருக்கிற திட்டிதான் எங்க ஊர். அந்தத் திட்டியில எல்லா வளவுக்குள்ளயும் தென்னமரம் நிக்கி, பென்னம் பெரிய இலுப்பை மரம் ஒண்ணும் ஊருக்கு நடுவில் றோட்டோரத்தில் இருக்கு. அந்த இலுப்பமரத்தடியில தான் பள்ளிக்கூடமும் இருக்கு. அந்தப் பள்ளிக்குத்தானே நீ வாத்தியா ராப்போறே. ஆனால் முதல் நாளிலேயே இப்படிச் சேத்தில புதைஞ்சிற்றா பாவம்! இன்னமும் முன் றோதையில் இருக்கிற கழியையே கழற்றிமுடியல்ல. எங்க ஊர் மண் பசையுள்ள மண் என்று சொன்னனே தொட்டா ஒட்டிக் கொள்ளும். சைக்கிள் றோதையில ஒட்டியிருக்கிற கழியை கம்புக்குச்சியால சுரண்டி எடுத்தாக் கம்பில ஒட்டியிருக்கிற கழியைத்தட்ட எவ்வளவு கஸ்டமாயிருக்கு. என்ன செய்றது? உன்ர கஸ்டகாலம் சுரண்டு.

எங்க ஊர் வயல் வெட்டைக்கு நடுவில் இருக்குதெண்டல்லவா சொன்னன்? நாய்க்கு நடுச்சமுத்திரத்திலயும் நக்குத் தண்ணிதான் எண்டு சொல்வாங்க. வளைச்சு வளைச்சு வயல் வெளியா இருந்தாலும் எங்க ஊரில எவனுக்கும், சொந்த வயற்காணி இல்ல. இந்த வயல்களுக் கெல்லாம் சொந்தக்காரர்கள் திருக்கிணாமலையிலயும், கிண்ணியாவிலயும், மூதூரிலயுந்தான் இருக்காங்க. அவங்கட வயல ஆயத்துக்கு எடுத்துத்தான் எங்க சனம் செய்யும். வயற்காணி எங்கட்ட இல்லாட்டியும் சோத்துப் பஞ்சம் இல்ல. ஆனா வெள்ளாம வெட்டுக்காலத்தில எங்க ஊருக்கு வந்தியெண்டாத் தண்ணிகுடிச்சிக்கமாட்டா. ஏனென்டா எல்லாக் கிணத்தடியிலும் மணச் சவுக்காரத்தை மேலில தேய்ச்சித் தேய்ச்சிக் குளிக்கிறதால கிணத்து தண்ணியெல்லாம் சவுக்கார மணமாகத்தான் இருக்கும். அப்படியாப்பட்ட பவிசு எங்க ஊருக்கு.

எவனிட்டயும் வயல்காணி சொந்தமாக இல்லையெண்டல்லவா சொன்னன். என்ர புருசனும் எகுத்தார் ஹாஜியாார்ர வயலில பத்து ஏக்கர ஆயத்துக் கெடுத்துத்தான் செய்தார். அந்தக் ஹாஜியாருக்கு திருக்கிணாமல டிஸ்கிறிக் முத்திலாக்காணி கணக்குப் பாக்கேலா. அதனால ஆயக்காசும் கறாராக வாங்கிறதில்ல. எங்க காலம் நல்லாத்தான் போச்சு. மூத்த மகளத் திருக்கிணாமல வேம்படிப்பாடசாலைக்கனுப்பித்தான் படிக்கவச்சார் என்ர புருஷன். ஆனாத் திடீரென்று அவர் செத்துப்போனார். வயலுக்குப் போய்த் தண்ணிகட்டிற்று வந்தவர் மம்பட்டிய ஊட்டு மூலையில சாத்திற்றுத் திண்ணையில் குந்தினார். நெஞ்சுக்க நோவுதெண்டார். அவ்வளவு தான். வயல்வெட்டைக்குள்ள இருந்த நாரையும் கொக்கும் குருவியும் எங்க ஊர்த் தென்னை மரங்களில இருட்டினப்பொறகு வந்து குந்தக்குள்ள அவர்ர சீவன் போச்சு! அவர் போனப்பிறகு நான்பட்ட பரயத்தைச் சொல்லேலா. அப்ப என்ர மூத்த மகள் எஸ்.எஸ்.சி பாஸ் பண்ணிட்டு வீட்டோட வந்து இருந்தா. அவளுக்குப்பிறகு ஒரு பொடியன்தான் அவனுக்குப்பத்து வயது இருக்கும். என்ர மகளும் படிச்சிற்றாள். அதனால கையைக்கால ஆட்டமாட்டா. நான்தான் நெல்லைக்குத்தி மாவிடிச்சி எப்படியோ என்ர புள்ளைகளைக் காப்பாத்தினன்.

வெள்ளாம வெட்டுக்காலத்தில அப்பஞ்சுடுவன். வெட்டுக் காரங்களுக்கு வாடிக்கையா அப்பம் கொளுக்கட்டை என்று குடுப்பன். வெட்டுமுடியிற காலத்தில அப்பம், கொளுக்கட்டை குடுத்த கணக்கால எப்படியும் ஒரு அவணம் நெல்சம்பாதிச்சிடுவன். பெரும்பாடுதான் எண்டாலும் சோத்துப்பஞ்சமில்லடா தம்பி, எங்கட ஊர் காவிரிபாயுற நாடுடா மகனே. மாவலிகங்கையைத் தான் நாங்க காவிரி எண்டு சொல்றம். இந்தக் காவிரிபாயுற நாட்டில சோத்துப் பஞ்சம் இருக்குமாடா தம்பி.

அவர் செத்து ரெண்டு வருசத்துக்குப் பொறகு என்ர மகளுக்கு றெயினிங் பள்ளிக்கு முடிவு வந்தது. நான் அசந்து போகல்ல. என்ர கையில் கெடந்த காப்பு ஜோடிய வித்திற்று மகளுக்குப் புத்தகம், சேலை, சூட்கேஸ் என்று எல்லாச் சாமானும் வாங்கிக் கொடுத்தன். மகள் மட்டக்களப்பு வஸ்ஸில ஏறிற்று றெயினிங் ஸ்கூலுக்குப் போனா. நான் பூரிச்சிப்போனன். ரெண்டுவருஷத்தில என்ர மகள் வாத்தியாரா வந்திடுவா அதுக்குப் பிறகு எனக்கென்னகுறை? காலுக்குமேல கால போட்டுக்கொண்டு சாப்பிடுவன்.

றெயினிங் ஸ்கூலுக்குப்போய் மகள் எனக்குக் கடிதம் எழுதினா. அரசாங்கம் மாதம் இருபது ரூபா அவக்கு எலவன்ஸ் கொடுக்குமாம் ஆனா இங்க இருக்கிற செலவு களுக்கு அந்தக்காசு காணாதாம். மேலதிகமாக மாதம் நாப்பது ரூபாயாவது வேணும் என்று எழுதினா.

நான் எங்க ஊர்த்தலம வாத்தியாரிட்டச் சொல்லி அவளுக்குப் பதில் எழுதினன். என்ரபதிலில 'மாதம் நாப்பது ரூபாக்காசு எனக்குப் பெரிய பொருட்டில்ல மகள், என்ர சதுரத்தச் சாறாப்புழிஞ்சென்றாலும் நான் உனக்குப் பணம் அனுப்புவன். நீ கவலைப்படாமற் கவனமாப் படிபுள்ள ' என்று எழுதச் சொன்னன்.

கூலிக்குக் குத்தி., கோழிவளர்த்து, அப்பஞ்சுட்டு வித்து எப்படியெப்படியெல்லாமோ சம்பாதித்து மகளுக்குக் காசு அனுப்பினன். மகளும் கவனமாகத்தான் படித்தாள். ரெண்டு வருஷம் முடியறதுக்கு இன்னமும் ரெண்டுமாசந்தான் இருக்கு. அப்ப மகள் எனக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினா "இந்த மார்கழி மாதத்தில எனக்குக் கடைசிப்பரீட்சையிருக்கு. பரீட்சை முடிந்ததும் பாடசாலையில பிரியாவிடை வைபவம் இருக்கு. அந்த வைபவத்துக்கு உடுக்கிறதுக்கு என்னட்ட நல்ல சேலஇல்ல. சேல ஒண்ணு நல்லதா வாங்கவேணும் எனக்குக் காசு நூறு ரூபா எப்படியும் அனுப்புங்க அம்மா".

நான் தெகைச்சிப்போனன். கார்த்திகை மாசத்து அடைமழைக் காலம். என்ர கையில மடியில ஒரு காசும் இல்ல, ஊரில ஒரு தொழிலும் இல்ல, எல்லாரும் தைப்பொறந்த பொறகு வாற வெள்ளாம வெட்ட நம்பி கடன்பட்டுத்தின்ற பஞ்சகாலம். இந்தப் பஞ்ச காலத்தில் எப்படி நான் நூறு ரூபாய் பெரட்றது. எதை நம்பிகடன் வாங்கிறது? யோசிச்சு யோசிச்சு அசந்து போன நான், வெள்ளாம வெட்டுக்காலத்த நம்பி அறாவட்டிற்குக் கடன்பட்டன. என்ர காதுத் தோட்டையும விற்றன். எப்படியோ நூறுரூபா புரட்டிற்றன். இதுக்குள்ள கெதியாக் காசனுப்பச் சொல்லி மகளிட்ட இருந்து அடுத்த கடிதமும் வந்தது.

காசைப்புரட்டிய நான் காசைத்தபாலில அனுப்பாம நேரில கொண்டுபோய் மகளிட்டக குடுப்பம் எண்டு எண்ணிக் கொண்டு பஸ்ஏறுறன். மல்லிகைத்தீவுச் சந்தியில இருந்து மட்டக்களப் புக்கு ரெண்டரை ரூபா தான் வஸ்ஸுக்கு. இண்டைக்குப்போய் நாளைக்கு வாறதானே. பத்து ரூபாக்காசு எனக்கு மாலேகமாக் காணும் என்றெண்ணிக் கொண்டு பஸ் ஏறினன்.

என்ன பின்றோதையில ஒட்டியிருந்த கழியையும் கழட்டிறியா? அச்சிலயும் மட்காட்டி லயும் ஒட்டிக் கொண்டிருக்கிறதையும் கழற்று, அதுக்குள்ள என்ர கதையும் முடிஞ்சிடும். பஸ்ஸில ஏறினனா? பத்து மணிக்கு பஸ் ஏறின நான் மூணு துறையையும் கடந்து பின்னேரம் ஐஞ்சு மணிபோலத்தான் புளியந்தீவுப்பாலத்தடியில ஸ்ராண்டில எறங்கினன். என்ர கையில சீலைப் பைக்குள்ள ஒரு சோத்துப்பார்சல், பஸ்ஏற முதல் வாய்க்காலில வெள்ளத்தில எதிரேறின பனையான் மீன் ஊருக்கு வந்து. அதில வாங்கிச் சிலதைப் பொரிச்சுச் குழம்பும் ஆக்கிச் சோறு கட்டிப் போனன். புழுங்கரிசில கட்டுச்சோறு கட்டினாப் பழுதாப்போனாலும் போகும் எண்டு பச்சரிசி பொங்கிக் கட்டுச்சோறு கட்டினன். அந்தச் சோத்து முடிச்சோடதான் நான் கேட்டுக் கேட்டு றெயினிங் ஸ்கூல நோக்கிப் போறன். சிங்கள வாடியில ஆஸ்

பத்திரிக்குக்கிட்ட இருக்குதாம் அந்தப் பெண்கள் பாடசாலை. நான் ரவுனுக்கால போறன். கடைசியாகக் காவியடிச்ச அந்தக் கட்டிடத்தக் கண்டு பிடிச்சன்!

கட்டிடத்துக்குள்ள ஏறி விறாந்தையில இருந்த மணிய அடிச்சன். ஒருத்தி வந்து கேட்டா. நான் மகள்ர பேரச்சொல்லி, அவளப்பாக்க வந்திருக்கன் என்று சொன்னன். அந்தப் பெண் உள்ளே போனாள். நான் விறாந்தையில கிடந்த வாங்கில இருக்கன். கொஞ்ச நேரத்தால என்ர மகள் வந்தா அவ இன்னொருத்தியோட வந்தா. அவளோட படிக்கிறவளாயிருக்கும். ஆனா அவளைவிடவும் என்ரமகள் அழகி. கையால குத்தின பச்சரிசித் தவிட்டு நிறம். ஆனா உதடெல்லாம் எப்பவுமே அவளுக்குச் சிவந்திருக்கும். நீளமா ஒடிசலா இருப்பா. நடக்கக்குள்ள இடுப்பு முறிஞ்சு போயிருமோ என்று நினைக்க வேணும். ஆனா பெரு வெளிக்குளத்துக்குள்ள பொழுது படக்குள்ள கூம்பிநிக்கிற தாமரைப்பூவைப்போல அவள் தாவணிக்கு மேலால நெஞ்சு நிமிர்ந்திருக்கும். என்ர பிள்ளையைப் பாத்தவன் சீதனம் இல்லாமலேயே அவளைக் கொண்டு போய்விடுவான் என நான் எண்ணுவன்.

அவள் என்னைக் கண்டதும் அவள்ர முகம் நல்லால்ல. ஊரில இருந்து அம்மா வந்திருக்காளே என்று அவசிரிக்கவும் இல்ல. முகத்தை உம்மெண்டுவச்சிக் கொண்டு வந்தா.

அவளைக்கண்டு நான் சிரிச்சன்.

"ஏன் நீ வந்தனி? என்று எரிஞ்சு விழுந்தா அவ. இதுக்கு நான் என்னத்தைச் சொல்றது? என் சேலைத் தலைப்பு முடிச்ச அவிழ்த்து நூறுரூபாயையும் கொடுத்தன். நாலாமடிச்சு முடிஞ்சி வைச்சிருந்த பத்துப் பத்து ரூபாத் தாள்கள். அத வாங்கின உடன மகள் திரும்பிக் கொண்டு நடந்தா.

நான் அவ்விடத்திலேயே தெகைப்பூண்ட மிரிச்சவள் போல நிக்கன். மகள் போகக்குள்ள தன்னோட வந்தவளிட்டச் சொல்றா 'எங்கம்மா இந்த வேலைக்காரிட்டக் காசக் குடுத்து அனுப்பியிருக்கா'

எனக்குப் பூமிபிளந்து என்னைவிழுங்கினாப் போல இருக்கு. அதுக்குப் பிறகு நான் ஊருக்கு வரல்ல. நேற்றுத்தான் வந்தன். என்னை பைத்தியம் என்று ஊருக்க சொல்றாங்க மகனே! நீ சொல்லுடா எனக்குப் பைத்தியமாடா?

உன்சைக்கிளில ஒட்டியிருக்கிற கழியெல்லாம் கழட்டிற்றியா? அப்ப இனி நீபோப் போறா.

என்ரகதையும் முடிஞ்சிடா மகனே. ஏண்டா உனக்கும் ஒரு அம்மா இருப்பா நீயும் ஒரு வாத்தியார் என்னைப்போல உன்ர அம்மாவையும் நீ பைத்தியக்காரியாக்கிவிடாத போய் வாடாமகனே போ. நானும் போறன். என்ர சாதிசனம் எச்சிலம்பத்தையிலையும் இருக்கு. பஸ்வந்தோடன நானும் போகப்போறன் அங்க.

வரட்டா மகனே.

◆◆◆◆◆◆

# குண்டு வெடிப்பு

குமார்மூர்த்தி

நேரம் ஆக ஆக அவளுக்கு பதட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. தட்டுத்த டுமாறி வாசல் வரை சென்று ஏதாவது அரவம் கேட்கிறதா என காதைக் கூர்மையாக்கிப் பார்த் தாள். பெரும் இரைச்சலும் குழப்பமுமாக இருந்தது. அவளுக்குப் பரிச்சயமான பக்கத்து வீட்டு ஆட்களையெல்லாம் கூப்பிட்டுப் பார்த்தாள். யாரும் பதில் குரல் கொடுக்கவில்லை. அந்தப் பெரிய சத்தம் கேட்ட திசையை அவளால் யூகிக்க முடிந்தது. அது அவள் மகன் கடலை விற்கும் இடமாகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் வலுத்ததும். அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. ஆனால் மறுபடியும் அவளுக்கு திசையில் சந்தேகம் வந்ததும், இந்தப் பக்கம் அவன் போக மாட்டான் என மனதை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். இருந்தாலும் இவ்வளவு நேரமும் அவன் ஒருநாளும் வராமல் இருந்ததில்லை என்பதை நினைக்கும்போது மறுபடியும் உடலெல் லாம் நடுங்கியது.

அவளுக்கு எல்லாமுமே அவனாகத்தான் இருந்தான். கண்ணை இழந்தபோதும் சரி, கணவனை இழந்தபோதும் சரி அவனே ஊன்றுகோல் ஆனான். சொல்லிக் கொள்ளச் சொந்தமில்லாத சேரி வாழ்க்கையாக இருந்தாலும் மனிதர்கள் ஒவ்வொருவரும் வாழ்ந்து தான் ஆக வேண்டும் என்கிற நியதிக்கு அவள் மட்டுமென்ன இந்தப் பிரபஞ்சமே தலைசாய்க்கத் தான் வேண்டும். மனித உயிர் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளப் போராடுகின்ற ஒவ்வொரு கணமும் ஒரு வரலாறுதான். ஆனால் ஏதோ ஒரு விதத்தில் மனித உயிர்களை வலிந்து அழிப்பதற்கு கங்கணம் கட்டி நிற்கும் சக்திகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே இருக்கிறது. காரணங்கள் மாறுபடலாம். சூழ்நிலைகள் மாறுபடலாம். ஆனால் இரையாகும் மனித உயிர்கள் எல்லாமே ஒன்றுதான்.

மறுபடியும் தட்டுத்தடுமாறி வாசலுக்கு வந்து பார்த்தாள். பெரும் இரைச்சலும் ஓலமு மாக குழம்பிக் கிடந்தது. அதற்கப்புறம் அங்கும் இங்கும் ஓடும் காலடி ஓசையையும் கரி நாற்றத்தையும் தான் அவளால் திட்டவட்டமாக உணர முடிந்தது. இதயம் ஒரு கணம் நின்று மறுபடியும் வேகமாக அடித்துக் கொண்டது. அந்தச் சம்பவம் நடந்த அன்றும் அப்படித்தான் என்பது ஞாபகத்துக்கு வந்ததும் மகனின் பெயரைச் சொல்லி உரக்கக் கூப் பிட்டாள். அது அவளிடமே திரும்பி எதிரொலித்தது. உட்கார்ந்து ஒரு பாட்டம் அழுது தீர்த் தாள். பட்டாசுக் கம்பனியின் வெடி விபத்தில் கருகிப்போன கணவனின் உடலும் கண் முன்னே தோன்றி மறைந்தது. அப்போதெல்லாம் அவளுக்கு பார்வை ஓரளவுக்கு இருந்தது. பின்னாளில் அது மெல்ல மெல்ல மறைந்து போயிற்று. பணம் இருந்தால் பார்வையை மீண்டும் பெற்று விடலாம் என்று சிறுவனுக்குத் தெரிந்த போது அம்மாவைக் கட்டியணைத்து பெரிய மனிதத் தோரணையில் ஆறுதல் கூறினான். இதோ பணத்தை உழைத்து விடுகிறேன் என்று கையைச் சொடுக்கி ஓசை எழுப்பி அவளைச் சிரிக்க வைத்தான். அன்றிலிருந்து அவன் கடலைச் சரு ளோடு பம்பரமாகச் சுற்றி வந்தான். பஸ்நிலைய நண்பர்கள் கூட அவனுக்காக போட்டி போடுவதை தவிர்த்துக் கொண்டார்கள். கிடைக்கும் ஒவ்வொரு சதத்திலும் அம்மாவின் பார்வை வந்து விடும் என்று மலை போல் நம்பியிருந்தான்.

ஆனால் நகரம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாகப் போக்குக் காட்டியது. காக்கிச் சட்டைகளும் கனத்த துப்பாக்கிகளும் எதற்கெடுத்தாலும் துருத்திக் கொண்டு நின்றன. திடீரென

ஒரு நாள் நகரமே புகைமண்டலமாகப் பற்றி எரிந்தது. ஏனென்று அவனுக்கு காரணம் புரிய வில்லை. ஆனால் அவன் கண் பறிக்கப்பட்டதைப் பார்த்து நிலை குலைந்து போயிருந்தான். இன்னும் எத்தனையோ அரக்கத் தனங்களைப் பற்றி அவன் கேள்விப்பட்டாலும் எல்லா வற்றிற்கும் மேலாக சிறையில் கண்கள் தோண்டி எடுக்கப்பட்டதைக் கேள்விப்பட்டதும் அம்மாவைக் கட்டிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதான். ஆனால் அதைப்பற்றி அவன் ஒருக்காலும் அறிந்திருக்கவில்லை. அது எப்படி நடந்திருக்கும் என்று கற்பனை பண்ணிப் பார்த்தான். எல்லாமே பெரிய பெரிய உருவங் களாக, சாம்பல் நிறத்தில் தெளிவில்லாமல் தெரிந்தது. காரணத்தைக் கேட்டு தாயை உலுக்கி னான். அவளுக்கும் எதுவும் தெரிந்திருக்கவில்லை. இது அநியாயம் என்று மட்டும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள். ஆனால் அவனது பிஞ்சு மனம் அதிலெல்லாம் சமாதான மடைந்ததாகத் தெரியவில்லை. அம்மா கண்பார்வை இல்லாமல்படும் அவஸ்தையை ஒவ்வொரு நாளும் பார்த்து வெதும்புகிறவனுக்கு அவளுக்கு பார்வை கிடைக்காதா என ஏங்கும் அவன் உள்ளத்துக்கு இருக்கும் கண்ணைக் குத்திப் பறிப்பது என்பது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத கொடூரம்தான். அதற்குப் பின்பும் பல கொடூரங்கள் நடந்து விட்டிருந்தாலும் அவனால் அதை மட்டும் மறக்க முடியவில்லை. நண்பர்களோடு கதைக்கும் போது மிகவும் ஆத்திரப்படுவான். சில சமயங்களில் அழுதே விடுவான். கண் இழந்த அந்த முகம் தெரியாத மனிதர்களைப் பரிதாபத்தோடு நினைத்துப் பார்ப்பான். வேதனையில் நெஞ்சுக்கூடு விரிந்து சுருங்கும்.

இதோ வந்து விடுகிறேன். டாக்டரிடம் போகலாம் என்று சொன்னவன் போன பக்கத்தை மீண்டும் ஞாபகப்படுத்திப் பார்த்தாள். அது வெடிச் சத்தம் கேட்ட பக்கத்துக்கு ஒத்ததாகவே இருந்தது. கலவரமடைந்தவள் மறுபடியும் திசையை ஞாபகப்படுத்திப் பார்த்தாள். குழப்பமா கவும் கலங்கலாகவும் இருந்தது. வாசற்படியில் உட்கார்ந்து கொண்டாள். இரைச்சலுக்கு மத்தியிலும் தூரத்தே கேட்ட வானொலியின் குரல் குண்டு வெடிப்பைச் சொல்லிக் கொண்டு தேய்ந்து போயிற்று. சின்னச் சின்னக் கால்களும் கைகளும் சிதறிக் கிடந்தது பற்றி அது ஒன்றும் அலட்டிக் கொள்ள வில்லை. ஆனால் அவளோ வாசலில் கேட்கும் ஒவ்வொரு காலடி ஓசையையும் கவனத்தோடு கேட்டபடி அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள்.

◆ ◆ ◆ ◆ ◆ ◆

# பருவான்கரை

- சக்கரவர்த்தி -

மெலிதான காற்று மரங்களை அசைக்க இரைச்சல் எங்கும் எழுந்தது. நீண்ட நேரத்திற்கு முன்பாகவே உஷ்ணம் சூழலை விட்டு வெளிநடப்புச் செய்திருந்தது. சொறி நாய ஒன்று சும்மா ஊளையிட்டு எரிந்த குப்பைமேட்டுச் சாம்பலுக்குள் ரோமங்கள் உதிர்ந்து போன உடலைப் புரட்டி சிலிப்பிற்று. கடத்தி கம்பிகளை காவுகொடுத்துவிட்டு நீட்டுநீட்டு கறுப்புப் பூதங்களாக மின்சாரக் கம்பங்கள். ஆக்காண்டி பறவை ஒன்று திசையைத் தொலைத்துவிட்டு அங்குமிங்குமாய் அவசர அவசரமாய் பறந்து கத்திற்று. முகம் தெரியாத இருட்டு. ஊர் உறங்கி நெடுநேரமாகி இருந்தது.

சரசுவதி வேகமாய் ஓடி ஓடி நடந்தாள். அவளது கண்களுக்கு இருட்டு பழக்கப் பட்டிருந்தது. இதயம் சமநிலை தவறி வேகமாய்த் துடித்தது. அதைவிட சரீரம் அதிகமாயப் படபடத்தது. கைக்குழந்தை இடுப்பினில் நிகழ்வுகள் புரியாமல் தூக்கமும் விழிப்புமாகச் சிணுங்கியது. எட்டு மாதப் பிள்ளை வயிறு அதிகமாய் சுமை கொடுத்தது.

வேலியை இணைத்து மூடியிருந்த தகரக் கதவைத் திறக்க சத்தம் பலமாய் எழுந்தது. தாழ்வாரத்தில் மடுத்தோண்டி படுத்திருந்த வீமன் சத்தம் கேட்டு பலமாய் உறுமியது.

"வீமா........."

சரசுவதி சத்தம் எழுப்பினாள்.

தனக்குப் பழக்கமான குரல் என்பதை புரிந்துகொண்டு உறுமலை அடக்கிக் கொண்டு முனகலுடன் ஓடிவந்து அவள் காலை உரசியது. ஒரு தடவை எம்பி அவள் மேல் தாவி விசுவாசத்தைக் காண்பித்தது.

சரசுவதி அதை ஒதுக்கிவிட்டு கதவைத் தட்டினாள்.

அம்ம ........!"

நிசப்தம்.

"அம்ம......... அம்மேய்.........."

வீட்டுக்குள் சரசரப்புக் கேட்டது.

"ஆரது........?"

தூக்கக் கலக்கமாய் குரல் கேட்டது.

"அது நான்தாங்கா சரசி! கதவ தெறகா............."

கதவு திறபட்டது. எண்ணைப் பசை இல்லாத பிணைச்சலில் உராய்வுச் சத்தம் இம்சையாய் எழுந்தது. கலைந்த தலையுடன் குலைந்த சேலையை இழுத்து இடுப்பில் செருகிக் கொண்டே குப்பி விளக்குடன் கதவுக்கு வெளியே வந்தாள்.

"என்ன மெனை இந்த நடுஊத்தில? அதுவும் புள்ள வகுத்துக்காரி. புள்ளையயும் தூக்கித்து வந்திரிக்காய். எங்க புள்ளையிர அப்பன்?"

கிழவி முகத்தில் பரபரப்பு. படபடப்புடன் கேட்டாள்.

"புள்ளைய ஒள்ளம் புடிகா"

"வா மெனேய்"

கிழவி சரசுவதியின் இடுப்பிலிருந்த குழந்தையை தனது இடுப்புக்கு மாற்றிக் கொண்டாள்.

சரசுவதி இடுப்பைப் பிடித்துக் கொண்டு திண்ணையில் பாரமாய் அமர்ந்தாள். கேவலுடன் அழுதாள்.

கிழவி திகைத்தாள்.

"என்ன மெனேய். ஏன் கொள்றுறா வகுத்துக்க நோகுதா? புள்ளையிர அப்பனிட்ட சொல்லி அனுப்பியிரிக்கலாமே. நான் வந்திரிப்பன். உள்ளுக்க வா. சுடுதண்ணிய வெச்சித்து நேசி மனிசிய போய்க் கூட்டித்து வாறன். அந்த நாசமறுவாளும் வாறாளோ தெரியாது. நேரத் தோடையே காச கேப்பாள்".

கிழவி சொல்லிக் கொண்டே இடுப்பிலிருந்த குழந்தையை படுக்க வைத்துவிட்டு சரசுவதியை கைத்தாங்கலாய் தூக்க முனைந்தாள்.

"எனக்கு ஒண்டுமில்லகா"

சொல்லிக் கொண்டே முந்தானைத் தலைப்பால் மூக்கில் ஊறிய நீரைத் துடைத்தாள்.

"அவரப் பொடியனுகள் புடிச்சித்து போறானுகள்". சொல்லிவிட்டு சரசுவதி பலமாய் அழுதாள். கிழவி விறைத்துப் போனாள். எதையுமே பேசமுடியாமல் திகைத்துப் போய் நின்றாள்.

"புள்ளையாக் கெழவா" பலமாய் கிழவி சத்தமிட்டாள்.

"காப்பாத்துப்பா..........!"

தலைமேல் கை தூக்கி வேதனையாய் வேண்டினாள். பின் அவளும் அழுதாள். கிழவியின் அழுகை சரசுவதியை மேலும் பலயீனப்படுத்தியது. சரசுவதி இன்னுமின்னும் கவலை யுடன் அழுதாள். கிழவி அனுபவசாலி. அதிகம் வாழ்ந்தவள். சரசுவதியின் நிலமை புரிந்து தன்மை சுதாகரித்துக் கொண்டு மெல்ல அடக்கினாள்.

"ஏனாம் மெனேய் புடிச்சித்துப் போறானுகள்?"

"எனக்கென்ன தெரியும். என்னவோ வெளங்கோணுமாம்!" விக்கிவிக்கி சரசுவதி சொன்னாள்.

"நாசமாய்ப் போவானுகள்"

கிழவி மண்ணை அள்ளி கிழக்கு மூலைப்பக்கமாய் வீசினாள்.

"இவனுகள் நம்மளை வாழவும் உடமாட்டானுகள். சாகயும் உடமாட்டானுகள்". கோபமும் சோகமும் கிழவியை ஏகமாய்த் தாக்கியது.

வீமன் முதுகில் கடித்த தேள் ஒன்றை முன்பல்லால் கடித்தது. தேள் இடம் மாறிப் பலமாய்க் கடிக்க தரையில் ஒரு தடவை புரண்டு எழும்பியது. வேலிக்குள் எதுவோ சரசரக்க ஓடிப் போய் வேலி மட்டையை காலால் பிறாண்டியது. வேகமாய் ஓடிவந்து திரும்பவும் குந்திக் கொண்டது.

வீட்டின் பின் பக்கம் இருந்த கூமாமரத்தில் பறவை ஒன்று சலனம் எழுப்பியது. சில விநாடி மௌனத்தின் பின் ஆந்தை ஒன்று கூமாமரக் கிளையிலிருந்து பலமாய் அலறியது. கூமாமர ஆந்தையின் அலறல் கேட்டு எங்கோ இருந்து இன்னொரு ஆந்தை விநோதமாய் அலறியது. சரசுவதியின் முகம் பயத்தால் வெளிறியது. ஊருக்குள் ஆந்தை அலறினால் அவசர மாய் ஒரு மரணம் நிகழும் என்னும் கிராமத்து ஐதீகம் உடனடியாய் மூளைக்குப் போயிற்று. சரசுவதிக்கு கண் இருட்டுவது போல் இருந்தது. வியர்த்தது. அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"என்ன மெனேய் ஊமத்தம் கோழி கத்துது"

சரசுவதியைவிட கிழவி அதிகம் பயந்தாள்.

"எனக்குப் பயமா இரிக்கி கா". சரசுவதியின் குரல் நடுங்கியது.

"அந்த நரகல் சும்மா கத்துது. அதுகளுக்கு இண்டைக்கு எரை கெடைக்கல்ல போல. அதுதான் ஊருக்குள்ள வந்து கத்துதுகள்".

கிழவி சரசுவதியை சமாதானப்படுத்த முயன்றாள். ஆனாலும் சரசுவதியைவிட அவள்தான் அதிகம் ஆந்தையின் அலறலால் கலவரம் ஆனாள். காக்கைகள் வாசலில் வட்ட மிட்டாலே கஸ்டகாலம் என்று கலவரமடைபவள். ஆந்தை அலறினாலோ அதிகம் ஆடிப் போபவள். இப்போது அடக்கிக் கொண்டு தனக்குள் மட்டும் அல்லோலப் பட்டாள்.

இல்ல, நீ சும்மா சொல்றா. ஊமத்தக்கோழி ஊமுனா ஆக்கள் சாகிற எலுவா? எனக்குப் பயமா இரிக்கி. சொல்லிவிட்டு சரசுவதி பலமாய்ச் சத்தம் போட்டு அழுதாள்.

"நான் என்ன மெனேய் செய்ய?"

"கண்ணா காட்டுப்பக்கம்தான் கூட்டித்துப் போறானுகள். வாகா போய்ப்பார்ப்பம்", சரசுவதி அழைத்தாள். ஏக்கமாய், கவலையாய் கிழவியின் முகத்தைப் பார்த்தாள்.

"கொப்பனும் இல்ல. போர்டியாற்ற வெள்ளாமைக்கு காவலுக்குப் பெயித்தாரு. இந்தப் புள்ளய ஆரிட்ட உட்டுத்துப் போறது?"

கிழவியில் கவலை ஏறிக்கொண்டது.

சரசுவதி எழுந்து கிழவியை கையால் தள்ளி விலத்தினாள்.

"வெல நான் தூக்கிறன். நீ வா!" சொல்லிக் கொண்டே எதுவுமே உணராமல் தூங்கும் குழந்தையை சரசுவதி நெருங்கினாள்.

"இல்ல மெனேய் நீ புள்ளவகுத்துக்காறி. நான் தூக்கித்து வாறன்"

சரசுவதியைக் கிழவி தடுத்தாள்.

"ஒள்ளுப்பம் பொறு. அரிக்கன் லாம்ப பத்த வைச்சித்து வாறன். அதுக்குள்ள லாம்பெண்ணையும் இரிக்கோ தெரியாது"சொல்லிக்கொண்டே கிழவி இருட்டுக்குள் போய்த் தடவினாள். பாரமான சட்டியில கால் அடிபட்டது. கால் இடறி வலித்தது. சருவச்சட்டி தன் பங்குக்கு ஓசையை எழுப்பிவிட்டு மெல்ல அசைந்தது. கிழவி வலியை அடக்கிக் கொண்டு அரிக்கன் லாந்தரைத் தேடினாள். பழைய சாமான்களுடன் பறண் மேல் கிடக்க கையால் கண்டு கொண்டாள். லாந்தரை எடுத்து தூசிதட்டி பற்றவைத்தாள். திரி பற்றிக்கொண்டது. அடியில் கொஞ்சமாக எண்ணை இருந்தது.

"இன்னா லாம்ப புடி. நான் புள்ளைய தூக்கித்து வாறன்"

சரசுவதியிடம் அரிக்கன் லாந்தரைக் கொடுத்துவிட்டு கிழவி தூங்கிக்கொண்டிருந்த குழந்தையை தூக்கி இடுப்பில் வைத்தாள். தூக்கம் கலைய குழந்தை சிணுங்கியது.

"கத்தாத மெனேய்"

கிழவி சொல்ல அதை குழந்தை கிரகிக்க முடியவில்லை போலும். தொடர்ந்து சிணுங்கியது.

லாந்தருடன் சரசுவதி முன்னே செல்ல கிழவி இடுப்பில் பிள்ளையுடன் இளைத்து இளைத்து நடந்தாள். இவர்கள் போகும் இடம் புரிந்துகொண்டதாலோ என்னவோ தெரியவில்லை. வீமன் இவர்களுக்கெல்லாம் முன்னால் ஓடிக்கொண்டிருந்தது.

உறங்கிக் கொண்டிருக்கும் ஊர் பயங்கரத்தை தோற்றுவித்தது. இருக்கும் இடத்தை காட்டிக்கொள்ளாமல் சில்லூறுகள் கத்தியது. இருட்டின் எல்லாத் திசையிலிருந்தும் ஓசையை எழுப்பின. சரசுவதியின் மனம் பதறிக்கொண்டே இருந்தது. "புள்ளையாரே அவர காப்பாத்து. ஒனக்கு வாழக்கொல நேந்து உடுறன். ஒன்னட்ட வந்து பொங்கிறன். காவடி எடுக்கிறன். அவர அவனுகளிட்ட இருந்து எப்படியும் காப்பாத்து". கடவுளிடம் மனது வேண்டியது நிஜமாகவே நெஞ்சுருக நேர்த்திக் கடன் வைக்கப்பட்டது.

கண்ணாக் காடு இருட்டுக்காடாய் இருந்தது. நட்சத்திரங்களின் வெளிச்சமோ நிலவின்

ஒளியோ அங்கு பயன் தருவதாய் தெரியவில்லை. ஊர் வெளிச்சம் தூரத்திலேயே தடைப்பட் டுப் போயிருந்தது.

ஆற்றிலும் சேற்றிலும் பட்டுவரும் காற்று உடலைப் பயத்துடன் சேர்த்து அதிகமாய் நடுங்கவைத்தது. புல்லும் வேளாண்மையின் அடிக்கட்டையும் சேற்றில் அழுகி நாறியது. காற்றோடு கலந்து சுவாசிக்க சுவாசிக்க குமட்டியது. தவளை இம்சையுடன் கத்தியது. அதுக்கு ஏதோ ஆபத்து போலும். பாம்பு ஒன்று அதனை விழுங்க எத்தனிக்கின்றது போலும். தவளை யின் தலையைத் தவிர மற்றப்பாகம் எல்லாம் பாம்பின் வாயினுள் போயிருக்க வேண்டும். தவளை திரும்பவும் கத்தியது. சத்தம் தேய்ந்து வந்தது. சத்தம் முற்றாக மங்கிப் போனது. பாம்பு தவளையை விழுங்கி விட்டதா? கண்ணாக்காடு உண்மையிலே படு பயங்கரமாய் தோன்றிற்று.

முன்னால் போய்க்கொண்டிருந்த வீமன் வேகத்தைக் குறைத்து தயங்கி நின்றது. சரசுவதி அதைத் தாண்டி முன்னேறினாள். கால் சேற்றில் முழங்கால் வரை புதைந்தது. புதைந்த காலை நிதானமாய் வெளியே எடுத்தாள். ஆனாலும் நிலை தடுமாறி குப்புற சாய்ந்தாள். வயிறு அடிபட குப்புற விழுந்தாள்.

"அம்மா.........ஆ........."

வேதனையில் பலமாய் அலறினாள். கண்ணாப் புதர்கள் இவள் போட்ட சத்தத்தை ஒரு தடவை எதிர் ஒலிக்க வைத்தது. கிழவி பதறினாள். கலவரமடைந்தாள்.

"கடவுளே" சத்தமிட்டுக் கூவினாள்.

"கவனமாய் எழும்பு மெனேய். கைய கொண்டா. புள்ள வகுறுடாப்பா.........." சொல்லிக் கொண்டே கிழவி ஒற்றைக்கையால் இடுப்புக் குழந்தையை இறுகப் பிடித்துக் கொண்டு மறு கையால் சரசுவதியை நிமிர்த்தினாள்.

சரசுவதிக்கு வயிற்றுக்குள் வலித்தது. விழுந்த வேகத்தில் வயிறு அடிபட வயிற்றுக் குள் இருந்த பிள்ளைக்கு வலிக்க அது கையைக் காலை அசைத்தது. அது அசைவைக் கொடுத்ததும் சரசுவதிக்கு வயிற்றுக்குள் வலித்தது. வலியால் முனகினாள். இடுப்பைப் பிடித்துக் கொண்டு இம்சையால் அழுதாள். நிதானமாய் நிற்க முடியாமல் வரப்பு மேட்டில் அமர்ந்து கொண்டு துடித்தாள். உடலெல்லாம் சேறாய் இருந்தாள்.

"ஆரது அங்க?"

இருட்டுக்குள் தூரத்திலிருந்து முரட்டுச் சத்தம் வேகமாய் வந்தது. அதைத் தொடர்ந்து துவக்குகள் உசாராகும் சத்தம் இருட்டில் எழுந்தது. வீமன் குரைத்தது இருட்டைப்பார்த்து.

"வீமா சும்மா இரி"

நாயை அதட்டினாள்.

"அது நாங்க"

"நாங்க எண்டால் ஆரு?"

"அரிசி குத்தி விக்கிற பொன்னிக்கெழவி"

"என்னயிறா இஞ்ச?"

"இஞ்ச ஒள்ளுப்பம் வாங்க கிளி"

கிழவி இருட்டைப் பார்த்து கெஞ்சினாள்.

நிமிடங்கள் சில இருட்டில் கரைந்தது. சரசரப்பு நெருக்கத்தில் கேட்டது. சரசரப்பு நெருங்க நெருங்க இருட்டில் இரண்டு உருவங்கள் மங்கலாய் தோன்றியது. சர்வ ஜாக்கிரதையாய் அடிமேல் அடியெடுத்து இரண்டு உருவங்களும் முன்னேறி வந்து கொண்டிருந்தன.

சரசுவதி இடுப்பைப் பிடித்துக் கொண்டு வலியால் முனகிக்கொண்டே இருந்தாள். வீமன் இருட்டை உற்று உற்றுப் பார்த்தது. இரண்டு வேற்று உருவம் அதன் மோப்ப எல்லைக்

குள் தென்பட உறுமியது. இரண்டு அடி முன்னால் வைத்தது. முன்னால் வைத்ததும்தான் பயங்கரம் உறைத்தது. நான்கு அடி பின்னால் ஓடி வாலை பின் காலிற்குள் சுருட்டிக் கொண்டு கிழவியின் பின்னால் பதுங்கிக் கொண்டது. இருட்டுக்குள் வந்து கொண்டிருந்தவர்கள் இவர்களை நெருங்கினார்கள். கிழவி அவர்களின் முகத்தைக் கவனித்தாள். இனங்கண்டுகொள்ள முடியவில்லை. முகந் தெரியாத இருட்டு.

"என்ன செய்யியேறல் இஞ்ச?"

இரண்டு பேரில் ஒல்லியாய் குட்டையாக இருந்தவன் கேட்டான். தனது குரல் முரட்டுத்தனமாய் இருக்க வேண்டுமென்பதில் அவனுக்கு பிரியம்போலும். முரட்டுத்தனமாய் முயற்சி செய்து கதைத்தான். ஆனாலும் அவன் குரலில் கிச்சுத் தன்மைதான் தென்பட்டது. இன்னும் வாலிப வயதை எட்டாத விடலைக் காலம் அவனது வயதையும் தோற்றத்தையும் மறைப்பதற்கு இருட்டு பெரிதும் உதவியது.

"இந்தப் புள்ளயிர அவர பொடியனுகள் புடிச்சித்து வந்தித்தானுகளாம் மெனேய்......" சரசுவதியை காட்டி அந்தப் பெடியன்களிடம் கிழவி சொன்னாள்.

"பொடியனுகள் எண்டால் ஆரு?"

இரண்டு பேரில் உயரமாய் இருந்தவன் கேட்டான்.

உண்மையிலேயே அவன் குரல் படு பயங்கரமாய் இருந்தது. கிழவி பயந்தாள்.

"ஆரெண்டு தெரியாது. கண்ணாவுக்குள்ளதான் கூட்டித்து வந்தாங்க" சரசுவதி முனகி முனகி சொன்னாள்.

"அப்படி நாங்க இஞ்ச ஒருவரையும் கூட்டித்து வரல்ல" பல்லைக் கடித்துக் கொண்டு கோபமாய் பதில் சொன்னான்.

"ஏன் மெனேய் கோவிக்கிறா? புள்ளத்தாச்சிக்காறி மெனேய் அந்தப் பொடியன உட்டுடுங்க கிளி கிழவி கெஞ்சினாள்".

ஆயுதங்களுடன் கூடவே கைத்தாங்கலாக இன்னொருவன். முகந்தெரியாத இருட்டுத்தான். இருந்தாலும் சரசுவதியால் இனங்காண முடிந்தது. கைத்தாங்கலாக அழைத்து வரப்படுவது

"என்னப்ப?" சின்னவன் கோபமாய் கிழவியை நெருங்கினான்.

"இவடத்த நிக்க வேணா. இந்தப் பொட்டையையும் கூட்டித்துப் போ பாப்பம்......... இல்லாட்டி........" சொல்லிக்கொண்டே துவக்கின் பின் பக்கத்தை ஓங்கினான்.

"அடிக்கப் போறயா.........? அடி! எங்களுக்கொண்ணா நாங்க போகமாட்டம். கொல்லுங்க......... எங்க எல்லாரையும் கொல்லுங்க..........." கிழவி தைரியமாய் சொன்னாள். வைராக்கியம் நெஞ்சில் ஏற வரப்புக் கட்டில் அமர்ந்துவிட்டாள். குழந்தை பீதியுடன் கிழவியை இறுக்க கட்டிக்கொண்டு பலமாய் அழுதது.

"நாங்கல்லாம் உசிரோட இரிக்கதாலானே இப்படிப் பாதகம் செய்யிறயல். எல்லாரையும் கொம குடுத்துப்போட்டு நீங்க மட்டும் இந்த சவக்காலையில வாழுங்க. கொல்லுங்க......... கொல்லுடா.."

மார்பில் அடித்து அடித்து சரசுவதி சத்தம் போட்டு அழுதாள்.

"பொட்ட கத்தாத........" சின்னவன் அதட்டினான்.

"நான் கத்துவன். கத்தினா சுடுவெயா? சுடு......."

"பொட்டை நரகல் கத்தாத உண்ட புருசனுக்கு வெளக்கம் நடக்கிது. வெளங்கிப் போட்டு இப்ப உடுவானுகள்"

சரசுவதி அழுகையின் வேகத்தைக் குறைத்துக்கொண்டாள்.

"உண்ட புருசனில எங்களுக்கு சந்தேகம் எங்களப் பத்தி அவன்தான் 'ரிப்' குடுக்கிறான்."

"எண்ட கடவுளே......! என்ன பொய்யச் சொல்றா நீ"

"பொய்யா ......? பொய்யா......? அதுதான் வெளக்கம் நடக்கிறது. யாழ்ப்பாணத்தில் இருந்து புதுசாய் ஏரியாவுக்கு பொறுப்பாளரு வாறாரு. அவரு வரக்குள்ள இஞ்ச ஒரு காட்டிக் குடுக்கிறவனும் இரிக்க போடாது. மறுகா எங்களுக்குத்தான் கூடாத பேரு". சின்னவன் அழுத்தமாய் சொன்னான்.

தூரத்தில் கொட்டப்பாக்கன் குருவி ஒன்று விநோதமாய் சத்தம் எழுப்பியது. இரெண்டு பேரும் உசாரானார்கள். சின்னவனின் தோளைத்தட்டி "சிக்னல் குடு" என்றான் மற்றவன்.

"கீக்...... கீச்ச்......கீச்ச்...... கீக்......"

அசல் கொட்டப்பாக்கன் குருவி போலவே சின்னவன் சத்தம் எழுப்பினான். சில வினாடி இடைவெளி விட்டு தூரத்தில் இருந்து அதேமாதிரிச் சத்தம் வந்தது.

கிழவியும் சரசுவதியும் விழி விரிய விரிய விநோதமாய் இவர்களைப் பார்த்தார்கள். நான்கைந்து உருவம் இருளிலிருந்து மெல்ல மெல்ல பிரிந்து முன்னேறி வந்து கொண்டிருந்தது. யாரோ வலியால் மெல்ல மெல்ல முனகும் ஓசை காற்றோடு சேராமல் தனியாகப் பிரிந்து வேறுபட்டு மெலிதாகக் கேட்டது. இருளிலும் உருவம் தெரியும் தூரம். நான்கைந்து பேர் ஆயுதங்களுடன் . கூடவே கைத்தாங்கலாக இன்னொருவன். முகந்தெரியாத இருட்டுத்தான். இருந்தாலும் சரசுவதியால் இனங்கண்டு முடிந்தது. கைத்தாங்கலாய் அழைத்துவரப்படுவது தன் புருசன்தான் என. அருகில் வந்ததும் சத்தமிட்டு அழுதாள். கண்ணாக் காட்டுக்குள் சலசலப்புக் கேட்டது.

"ஆராக்கள் இவைய?'

வந்தவர்களில் ஒருவன் இருவரையும் பார்த்து கடுமையாக, சற்று வேகமாகக் கேட்டான்.

"இவண்ட பொஞ்சாதியும் மாமியும்: உயரமானவன் சொன்னான்.

"ஆரிஞ்ச உங்கள வரச்சொன்ன'?

சரசுவதியும் கிழவியும் அழமட்டும் செய்தார்கள்.

"இனி இந்த சேட்டை எல்லாம் வெக்காத...... மறுகா தெரியும்தானே...... தொம்பலுக்க தாட்டுப் போடுவன்.

சரசுவதியின் புருசனால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை. தலை, நீரில்லாத முளைக்கீரை மாதிரி தொய்ந்து கிடந்தது. பிடித்திருக்கும் கையை விட்டால் அந்தக் கணமே தரையில் விழுந்துவிடும் நிலை. கொடூரமான செயல்களை சில நிமிடங்கள் மூளை கிரகிக்கும். அதன் பிறகு தற்காலிகமாய் மூளை தனது சிலசெயற் பாடுகளை நிறுத்திவிடும். முக்கியமாக உணர்தலை அது நிறுத்திவிடும். சரசுவதியின் புருசனால் இப்போது எதையுமே உணர முடியவில்லை.

"கூட்டிற்றுப் போங்க......"

சரசுவதியின் புருசனைத் தள்ளிவிட்டார்கள். உணர்ச்சி இல்லாமல் குப்புற விழுந்தான். முனகலைத் தவிர அவனில் இருந்து எந்த அசைவும் இல்லை. குப்புற விழுந்தவனை சரசுவதி ஓடிப்போய் நிறுத்தி தன் தோளில் அவன் சுமையை ஏலுமானவரை தாங்கி நடந்தாள். வயிற்றுலி இப்போது இளகி இருப்பது போன்று இருந்தது. இளகிய வலி நிஜமா பிரமையா என்று இனம் கண்டுகொள்ள முடியாமல் மனது பூராக விதமான இம்மை வியாபித்திருந்தது.

கிழவி குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு முன்னே செல்ல வீமன் அவள் பின்னால ஓடிற்று. சரசுவதி தட்டுத்தடுமாறி புருசனுடன் அணைத்தபடி நடந்தாள்.

வீட்டுக்கு வந்ததும் குழந்தையை இறக்கிவிட்டு கிழவி பாயை விரித்து அதன்மீது நைந்துபோன நைலோன் சீலை ஒன்றை விரித்து "இதுக்கு மேல படுக்க வை புள்ள" என்றாள் சரசுவதியிடம்.

சரசுவதி அவனை மல்லாக்கப்படுக்கவைத்தாள். முதுகு தரையில் அண்டமுடியாமல் முனகினான். சரசுவதி ஒருக்களித்து படுக்க வைக்க முயற்சி எடுத்தாள். எதிர்ப்பு இல்லாமல் உருண்டான். அவனது உடம்பில் இரத்தம் கண்டி நீல நிறக் கோடுகளாய் ஆங்காங்கு தெரிந்தது. மூக்கால் சுவாசிக்க முடியாமல் வாயால் சுவாசித்தான். வாய் அகலமாக விரிந்து கிடந்தது. அதிகமாய் மூச்சு வாங்கி வலியால் முனகினான்.

"பாதகனுகள்..... ஒண்டும் தெரியாத ஆளப் போட்டு இப்பிடி அடிச்சிரிக்கானுகளே. இவனுகளெல்லாம் மனிசனுகளா? கண்ணழிஞ்சி போவானுகள்". சரசுவதி கேவிக் கேவி அழுதாள். குழந்தை எதுவும் அறியாமல் சரசுவதியின் அருகில் அமர்ந்திருந்தாள்.

"மெல்ல கத புள்ள அவனுகள் வேலிக்கட்டைக்குள் நிப்பானுகள்".

"நிக்கட்டுமே.... கேட்டுத்து வந்து எல்லாரையும் சுட்டுக் கொல்லட்டும் அரக்கனுகள்".

"மெனேய்... மெனேய் சத்தமா கதைக்காத.... அவனுகள்ற கொணம் தெரியும்தானே. அவருக்கு ஒடம்பு நோகும். கரியபவளத்தை அரச்சி சாராயத்தோட முட்டையையும் அடிச்சி குடுத்தா வருத்தத்த எடுக்கும். நான் போய் கிட்டுணன் பரிசாதியாரிட ஊட்ட போய் வாங்கித்து வாறன். நீ மஞ்சளையும் உப்பையும் அரச்சி வை. நல்லெண்ணையையும் சூடாக்கி வை. ஒத்தணம் குடுப்பம்." சொல்லி விட்டு கிழவி அரிகேன் லாந்தருடன் வெளியேறினாள்.

அம்மாக்காறி சொன்னதையெல்லாம் சரசுவதி செய்தாள். அரைமணி நேரம் கடந்து கிழவி வந்தாள். வந்த உடன் கரியபவளத்தை அம்மியில் வைத்து அரைத்து நன்கு மாவாகியதும் அதை ஒரு சிறிய பாத்திரத்தில் போட்டு சாராயத்தை ஊற்றி நன்கு கலக்கினாள். பின் முட்டையை உடைத்து வெள்ளைக் கருவை மாத்திரம் எடுத்து சாராயம் கரியபவளம் கலந்த கலவையுடன் வெள்ளைக்கருவையும் நன்கு கலக்கிய பிறகு சரசுவதியிடம் கொடுத்தாள். வாங்கிய சரசுவதி தனது புருஷனிடம் பருக கொடுத்தாள். வாங்க முடியாமல் முடங்கினான். தலையை தன் கையால தூக்கி மடி மீது வைத்து அவனுக்கு குடிக்க கொடுத்தாள். குடித்தான் தூரத்தில் இரையல் ஏதோ கேட்டது. சரசுவதியும் கிழவியும் செவியை கூர்மையாக்கினார்கள். உடனடியாக இனம் காண முடியவில்லை துடிக்கப் போன போடியாரின் உழவு இயந்திரமா? மனது முடிவு கொண்டது. விநாடிகள் கடந்து போக மனது மறுத்தது. சத்தம் நெருங்கி கேட்டது. ஏழெட்டு வாகனங்களின் தொடர்ச்சியான இரையல்....

மிக மிக நெருக்கமாக வாகனங்களின் சத்தம்.... அதைத் தொடர்ந்து யாரோ வீட்டைச் சுற்றி ஓடும் சத்தம். அந்நிய மொழியில் கட்டளையிடும் குரல். கூடவே சொந்த மொழிச் சத்தங்களும். கிழவியும் சரசுவதியும் ஆளாளுக்கு விபரீதம் புரியாமல் ஆச்சரியமாய் பார்த்துக் கொண்டார்கள்.

வீட்டு வாசலிலும் நடமாட்டம். திறந்த கதவு வழியாய் உருவங்களும் தெரிந்தது. சரசுவதி எட்டிப் பார்த்தாள்.

தலை வளர்த்து, கறுப்பு நிற களிசானும் அதே நிற தொள தொளப்பான சேர்ட்டும் கொண்ட ஒருவன் துவக்குடன் கால்களை அகட்டி அசட்டையாய் நின்றான்.
சரசுவதியின் மனதுக்குள் ஏதோ பகீரென பற்றிக் கொண்டது.

"எங்கடி உன்ட புரிசன்?"

சரசுவதியை பார்த்து வெறியாய் கத்தினான்....

"என்னத்துக்கு கேக்கிட...."

மிகுதி வரவில்லை சரசுவதி அழுதாள்.........

"எங்களுக்கு அவன் வேணும். அவன நாங்க வெளங்க வேணும்.."

"அவரு இஞ்ச இல்ல மய்யோரிச் சேனைக்கு காவலுக்கு பெயித்தாரு".

"காவலுக்கு பெயிந்தானா? ஆருக்கு விசுக்கோத்துக்கால உடுறா? அன்னாபடுக்கிறதுரு ஆரு?

"அது அப்பரு!"

"கொப்பரா? வாடா வெட்டைக்கு!"

அவன் அழைத்தது சரசுவதியின் புரிசனுக்கு கேட்டது. முயற்சி செய்தான். அவனால் அசையக்கூட முடியவில்லை.

"அவர இப்பதான் பொடியனுகள் அடிச்சிப் போட்டு கொண்டு போட்டவனுகள்".

"பறவள்ளா... வாடா வெட்டைக்கு".

"அவரு எழும்ப மாட்டாரு ...... எழும்ப அவரால ஏலா?"

சரசுவதி ஓடிப்போய் புருஷன் அருகில் அமர்ந்து கொண்டாள்.

பச்சை நிற உடுப்புப்போட்ட அரச படை அதிகாரி ஒருவன் வாசலில் நிற்பவன் பக்கம் நெருங்கினான். ரஷ்த்தவாதி இன்னவத.......?" மெதுவாய் கேட்டான்

"ஓவ் மாத்தையா........ அத்துள புதிய கறனுவா" திக்கி திக்கி சொன்னான்.

மிக குறுகிய காலத்தில் கற்றுக் கொண்ட சிங்களம் போலும் உச்சரிப்பில் பிழை விட்டான்.

"புதி......... ரஸ்த்தவாதி புதியகறுனுவா...... ஹா......ஹா..." கேட்டு விட்டு சிங்கள அதிகாரி சிரித்தான். சிரித்து விட்டு கடுமையான குரலில் "எலியட்ட அறங்கெனவா" என்றான்.

வாசலில் நின்றவன் வீட்டின் உள்ளே போய் படுத்திருந்தவனை பிடித்து வெளியே கொண்டு வந்தான்..........

கிழவி ஓடி வந்தாள். "மெனேய்...... மெனேய்...... இப்பத்தான் அவனுகள் உங்களுக்கு சப்போட்டாம் எண்டு அடிச்சிப் போட்டு கொண்டு போட்டவனுகள். நீங்களும் இப்பிடி இந்த ஐயாமாரோட வந்து அநியாயம் செஞ்சா எப்படி மெனேய்?" கிழவி கேட்டாள்.

சரத்தை மடித்துக் கட்டிக் கொண்டு கறுப்பு சேர்ட் போட்ட இன்னொருவன் கிழவியை நெருங்கினான்.

"இவனில் எங்களுக்கு சந்தேகம். இவன நாங்க வெளங்க வேணும். அவனுகளோட இவனுக்கு பழக்கம் இரிக்கி. கொழும்புல இருந்து இந்த ஏரியாவுக்கு புதிசா ஒரு கொமாண்டர் வாறாரு. அவரு வரக்குள்ள இஞ்ச ஒரு பயங்கரவாதியும் இரிக்கப் போடாது. மறுகா மறுகா எங்களுக்குத்தான் கெட்ட பேரு. நாங்க இவன வெளங்க வேணும்;". நெருங்கினவன் கிழவியிடம் சொன்னான்.

சொல்லிய மறுகணமே வாசலில் கிடந்த சரசுவதியின் புருஷனின் காலை அவன் பிடிக்க உள்ளேயிருந்து வந்தவன் கைகளை பிடிக்க இருவருமாக அவனை தூக்கிக் கொண்டு போய் ராணுவ வண்டிக்குள் எறிந்தார்கள்.

கிழவி பேச முடியாமல் திகைத்து நின்றாள். சரசுவதிக்கு இடுப்பு வலி எடுத்தது. வயிற்றைப் பிடித்துக் கொண்டு திண்ணையில் சரிந்தாள்.

வாகனங்கள் வேகமாய் புறப்பட்டு போயின........ இருள்தான் ஆனாலும் புளுதி பரவுவதை உணர முடிந்தது.

◆ ◆ ◆ ◆ ◆ ◆

# கதையும் சிறுகதையும்

கதை - 01

செ.யோகராசா

## சிங்கமும் கரடியும்

ஒருநாள் காட்டில் மான் ஒன்று இறந்து கிடந்தது. இதனைக் கண்ட சிங்கமும் ஒரு கரடியும் அந்த மானைத் தின்பதற்காக ஒரே சமயத்தில் அங்கு வந்தன.

சிங்கம் கரடியைப் பார்த்து "நானே முதலில் இதனைக் கண்டேன். ஆதலால் நானே முதலில் உண்பேன் என்றது. அதற்குக் கரடி நானே முதலில் இதனைக் கண்டேன். ஆதலால் நானே முதலில் உண்பேன்" என்றது.

இதனால் இரண்டும் சண்டையிட்டன. வெகுநேரம் இரண்டும் கடுமையாகச் சண்டையிட்டன.

தற்செயலாக அங்கு வந்த நரி ஒன்று இதைக் கவனித்தது. சண்டையினால் களைத்த சிங்கமும் கரடியும் நிற்கமுடியாமல் கீழே விழுந்து படுத்தன. இது தான் நல்ல தருணம் என்று நரி எண்ணியது.

சிங்கத்திற்கும் கரடிக்கும் தெரியாமல் மானைத் தின்போம் என்று நினைத்தது மெல்ல நடந்தது.

மான் கிடந்த இடத்திற்குச் சென்றது. அதைத் தின்ன ஆரம்பித்தது. தன் வயிறு நிரம்பும் வரை அந்த மானைத் தின்று முடித்தது. மெதுவாக வந்த வழியே திரும்பியது.

சண்டையினால் களைத்துக் கிடந்த சிங்கமும் கரடியும் எழுந்தன. மானின் இறைச்சியைக் காணவில்லை வெறும் எலும்புகளே கிடந்தன.

அவ்வேளையில் நரி ஒன்று வெகுவேகமாகச் செல்வதை அவை கவனித்தன. வீண் பிடிவாதத்தினால் கிடைத்த உணவை இழந்து விட்டோமே என்று ஏங்கின. தங்கள் அறிவின்மையை நினைத்து வருந்தின.

"வீண் பிடிவாதம் நன்மை தராது"

◆◆◆◆◆◆

1. ஒரு கதையைச் சிறுகதையாக்கும் முயற்சி இது.
2. முதல் வரைவு (First Draft) என்பதை மனதில் கொள்க.
3. ஒப்பிட்டு நோக்குக.
4. தலைப்பு இடுக.

"நான் தான் முதன்முதலாக அதனைக் கண்டேன்.......................
நான்தான் முதலிலே தின்பேன்;"
இவ்வாறு உரத்துச் சத்தமிட்டுக் கூறியது சிங்கம்.

வார்த்தைகள் கடுஞ்சினத்துடன் வெளிவந்து கொண்டிருந்தன. வாயிலிருந்து எச்சில் ஊறுவதை அதனால் தடுக்க இயலவில்லை. கொழுத்த மான் அல்லவா அந்த நாவல் மரத் தடியில் இறந்து கிடக்கிறது!

"முதலில் நான்தானே கண்டேன். நான்தான் தின்பேன்" என்றது கரடி
விட்டுக்கொடுக்கத் தயாரில்லை இரண்டுமே சண்டை எந்தநேரமும் ஆரம்பிக்கலாம் போலிருந்தது.

வார்த்தைகள் முற்றின! சண்டை ஆரம்பமாகி, நிகழ்ந்து கொண்டிருந்தது.
அவ்வேளையிலே எங்கிருந்தோ வந்து சேர்ந்தது அந்த நரி.
சண்டைக்காட்சி நரியையும் கவர்ந்தது. "சபாஷ்............. சபாஷ் இவ்வாறு அடிக்கடி கூறி தனது பாராட்டுதல்களை அவ்வப்போது வழங்கியது நரி.

ஊக்கம் கிடைக்கவே சிங்கமும் கரடியும் தம்மை மறந்து சண்டை செய்து கொண்டிருந்தன.
கொழுத்தும் வெயில்
நேரம் நழுவிக் கொண்டிருந்தது
களைப்பு ஒருபுறம் பசி மறுபுறம்:
தமக்குத்தாமே யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்திக் கொண்டன
சிங்கமும் கரடியும்

"எமக்குள் நாம் வீண் பிடிவாதம் பிடிக்காமல் இனியாவது மான் இறைச்சியைத் தின்போம்" இவ்வாறு கூறிக்கொண்டு எழுந்து நாவல் மரத்தடி நோக்கிப் புறப்பட்டன.

இரண்டுமே நாவல் மரத்தடியை நெருங்கி விட்டன. தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்த நரி சலசலப்புச் சத்தம் கேட்டு விழித்துக் கொண்டது. மரியாதை செலுத்துவது போல் சடாரென்று எழுந்து நடக்கமுடியாமல் நடந்து ஒரு புறமாக ஒதுங்கிச் சென்றது நரி.

சிங்கமும் கரடியும் நாவல் மரத்தடியில் மானின் உடல் கிடந்த இடத்தை உற்று நோக்கின.

அங்கே.................
மானின் எலும்புகள் மட்டும் சிதறிக் கிடந்தன. சிங்கத்தையும் கரடியையும் அனுதா பத்துடன் பார்ப்பது போல
திரும்பிப் பார்த்தன இரண்டும்
தொலைவில் நரி ஓடிக்கொண்டிருந்தது.

◆ ◆ ◆ ◆ ◆ ◆

கதை – 02

# போகாமல் வந்தேனே

ஓர் ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவன் ஒரு பொருளும் ஈயமாட்டான். அதற்கேற்றாற்போல் அவன் மனைவியும் உலோபி. ஒருநாள் ஒருவன் இவர்களிடம் போய் "இன்று மதிய உணவுக்கு வருகிறேன். நன்றாகச் சமைத்து வையுங்கள்" என்று சொல்லிவிட்டுப் போனான்.

இதைக் கேட்ட குடியானவன் திடுக்கிட்டான். இவனுக்குச் சாப்பாடு கொடுக்காமல் விட என்ன செய்யலாம் என்று யோசித்தான். உடனே தன் மனைவியை அழைத்தான். இன்று மத்தியானம் ஒருவன் சாப்பிட என்று வருவான். அப்போது நான் உனக்கு அடிப்பது போல் சுவரில் அடிப்பேன். நீயோ வலி பொறுக்காது உரத்து அழுவதைப் போல் அழு. நாம் இருவரும் இவ்வாறு செய்தால், வருபவன் கணவன் மனைவிக்குள்ளே ஏதோ சண்டையாக்கும் என்று நினைத்துச் சாப்பிடாமல் திரும்பிப் போய்விடுவான்" என்றான். மனைவியும் "சரி" என்றாள். மத்தியான வேளை வந்தது. சாப்பிட வருவதாகக் கூறிச் சென்றவன் வந்தான். தூரத்தில் அவன வருவதைக் கண்டதுமே குடியானவன் தனது போலி நாடகத்தைத் துவங்கி விட்டான்.

சாப்பிட வந்தவன், கணவன் மனைவிக்குள் அடிபிடியாயிருக்கும்போது எப்படி எனக்குச் சாப்பாடு கிடைக்கும் என்று எண்ணி வெளியில் திரும்பிப் போய்விட்டான்.

வந்தவன் திரும்பிப் போனதுமே குடியானவன் சுவரில் அடிக்கும் வேலையை நிறுத்திவிட்டுத் தன் மனைவியை பார்த்து பேசினான். அடியே! எப்படி என் யோசனை. சாப்பிட வந்த ஆளைத் திருப்பி அனுப்பி விட்டேனே, பார்த்தாயா? உன்னையும் நோகாமல் அடித்தேனே" என்றான். "ஆம் சுவாமி! நானும் என் உடம்பில் நோகாமல் விக்கி விக்கி அழுதேனே" என்றாள அவன் மனைவி சிரித்தபடியே.

அப்பொழுது வெளி விறாந்தையில் ஒரு குரல் கேட்டது "நானும் போகாமல் வந்தேனே! வாருங்கள் சாப்பிடலாம் என்பதே அது.

வீட்டுக்கு வந்தவர் தான் கொண்டு வந்த குடையை மறந்து போய் விட்டுவிட்டுச் சென்று விட்டார். சற்றுத் தூரம் போனவர் குடையை எடுப்பதற்காகத் திரும்பி வந்தபோதே இவர்களது போலி நாடகம் அவருக்கு அம்பலமாகியது.

வெட்கித் தலைகுனிந்த குடியானவனும் மனைவியும் வந்தவருக்கு உணவு பரிமாறினார்கள்.

"நாம் மற்றவரை ஏமாற்ற நினைக்கலாகாது"

◆◆◆◆◆◆

1. ஒரு கதையைச் சிறுகதையாக்கும் முயற்சி இது
2. முதல் வரைவு (First Draft) என்பதை மனதில் கொள்க.
3. ஒப்பிட்டு நோக்குக.
4. தலைப்பு இடுக.

"நீ உன் வீட்டிற்குப் போய்விடு. இவ்வளவு காலம் ஆகியும் நல்லாகச் சமைக்கத் தெரியாத உனக்கு இங்கு என்ன வேலை?

கதவைத் தட்டுவதற்கு எண்ணிய சற்குணன் அம்முயற்சியைக் கைவிட்டான். ரங்கனது வீட்டின் உள்ளிருந்து கேட்ட குரல்கள் அவ்வாறு செய்யத் தூண்டின.

"உங்களுக்கு என்னவேலை செய்தாலும் - எப்படிச் செய்தாலும்இப்படித்தான் சொல்வீர்கள்......... சீ .......... நீங்களும் ஒரு மனுஷனா?

"கனகத்தின் சொல்லடிகள்!

தொடர்ந்து -

அழுகுரல்கள் கேட்டன.

இதற்கு மேலும் சற்குணன் இவ்விடத்தில் நிற்க விரும்பவில்லை.

** ** **

சற்குணன் நீண்ட நாட்களின் பின் அன்றுதான் அவ்வூருக்கு சோதிடர் ஒருவரை நாடி வந்திருந்தான். காலையில் வந்தவுடன், தனது பால்ய கால நண்பனான ரங்கனைச் சந்தித்து விட்டு மத்தியானச் சாப்பாட்டிற்கு வருவதாகக் கூறி விட்டுச் சென்றான். அப்படி வந்த வேளையிலே தான் இவ்வாறான சம்பவம் நிகழ்ந்தது.

** ** **

"பார்த்தாயா! சாப்பாட்டிற்கு வந்திருந்த சற்குணனை எப்படித் திருப்பி அனுப்பினேன் என்பதை" தனது மனைவியிடம் கூறியவாறு வாய்விட்டுச் சிரித்தான் ரங்கன்.

"ஓம், ஓம்......... பலமாக அடிவாங்கியது போல நானும் அழுதேன்தானே! என்றாள் கனகம்.

** ** **

சடுதியாக எவரோ கதவைத் தட்டினார்

ரங்கன் கதவைத் திறந்தான்.

"நான் போகவில்லை திரும்பி வந்து விட்டேன என்று கூறியவாறு எதிரில் நின்றான் சற்குணன். மறந்து வைத்து விட்டுச் சென்ற அவனது குடை இப்போது கைகளில் இருக்கிறது.

◆◆◆◆◆◆

101-04

1-4
25 - 26

1 - 12

1 - 4

13 - 14

23 - 26

தமிழ்ச்சுடர் அச்சகமும் பதிப்பகமும் — 240, திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பேசி:065—26489